உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—உ௬.] விபவஹு ஆவணிமீ [பகுதி—௧௰.
Vol. XXVI. August-September-1928. No. 10.

பிரகிருதிசாஸ்த்ரம்.

(PHYSICAL SCIENCE)

—⦀(o)⦀—

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்
ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., எழுதியது)

பௌதிகம். (Physics).

III. ஒளி (Light).

[௩அஅ—ம் பக்கத் தொடர்ச்சி].

ஒளித்தன்மையியல் (Nature of Light).

ஒளித்தன்மையென்பது ஒளியின்தன்மை எனப் பொருள்படும். கதிர்கள் கண்ணுக்கு நேர்கோடுகளாகச் செல்வதுபோலத் தோன்றுகின்றனவே ஒழிய, அவை அப்படிச் செல்வதில்லை. அவற்றின் பாதை படம் 31-ல் உள்ளவாறு பாம்பின்பாதைபோல வளைந்து வளைந்து செல்லும். இது சற்று ஆச்சரியமாகத் தோன்றுமேயெனினும்; உண்மையே.



படம் 31.

சாதாரணமாகக் கண்ணுக்குக் கதிர்கள் ஒரு அம்பின்பாதை போல நேர்மையாகத் தோன்றுவதற்குக்காரணம் இவ்வளைவுகளின் நுட்பமேயாகும். ஒரு கதிரின் பாதையில் ஒரு அங்குல நீளம்

எடுத்துக்கொண்டால் அதிற் பலகோடி வளைவுகள் இருக்கும். இவ் வளைவுகளை மிக உயர்ந்த பூதக்கண்ணாடிகளாலும் பார்ப்பதற் கியலாது. அப்படியானால், காணாத வளைவினை எப்படி இருக்கிறதெனக் கூறலாம்? எனின், இக்குணமடியாக ஏற்படும் நிகழ்ச்சிகளாகிய அலைக்கலப்பு (Interference) முதலியவற்றின் சான்றுகளைக்கொண்டு கூறலாம். இச் சான்றுகளை இங்கு விரித்தல் இயலாதாதலால், விஷயத்தைத் தொடர் வோம். படம் 30-ல் ஒளியின்பாதையை நோக்கத் தண்ணீரின்மீது செல்லும் சிறு அலைகளின் நினைவு நமக்கு இயல்பாகவே ஏற்படும். எவ் விதம் ஒரு தடாகத்தில் ஓரிடம் ஏற்பட்ட அசைவு அலைகளாக நீரின் மீது வியாபித்துச்செல்லுகின்றனவோ, அவ்வண்ணமே ஒரு பிரகாச முள்ள வஸ்துவில் ஏற்படும் அசைவு, எங்கும் நிறைந்த ஈதர் (Aether) என்னும் புலன்களுக்குவிஷயமல்லாதபொருளினூடே அலைகளாக வியாபித்துச் செல்லுகின்றது. பிரகாசமான வஸ்துவில் ஒளி எப்படி ஏற்படுகின்றது? அவ்வஸ்துவிலுள்ள எலெக்திரான்கள் (Electrons) என்னும் நுண்ணிய பகுதிகளின் அசைவு விகற்பங்களால் ஒளி ஏற் படுகின்றது. அந்த நுண்ணிய பகுதிகளின் வரலாறும், அவற்றில் ஏற்படும் அசைவு விகற்பங்களின் வரலாறும், மின்சாரத்தின் (Electricity) இயல்பினைக் கூறியபின்னரே விளங்கும். படம் 31-ல் சிவப்பு ஒளிக்கும் ஊதா ஒளிக்குமுள்ள வித்தியாசம் காட்டப்பட்டிருக்கிறது. ஒரு உயர்வும் ஒரு பள்ளமும் (a crest and a trough) சேர்ந்தது ஒரு அலை (Wave) எனப்படும். படம் 31-ல் சிவப்பு ஒளியின் அலைநீளம் (Wave length) ஊதா ஒளியினதைக் காட்டிலும் அதிகமாயிருத்தல் கவனிக்கத்தக்கது. பற்பல நிறமுள்ள ஒளிகளின் வித்தியாசத்திற்குக் காரணம் அவற்றின் அலைநீள வித்தியாசமேயாகும்.

ஒளியும் உஷ்ணத்தைப்போல, சக்தியின் பரிபாகமே. வேலைச் சக்தியைக்கொண்டும் உஷ்ணசக்தியைக்கொண்டும் (Work Energy and Heat Energy) ஒளிச்சக்தியை உண்டாக்கலாம். ஒரு கல்லை உயர்த்தி மற்றொருகல்லின்மீது அடித்தால், இரண்டும் தாக்கவே, நெருப்புப்பொறிகள் பறந்து ஒளி வெளிப்படுகின்றது. பூமியிழுப்பை எதிர்த்துக் கல்லை உயர்த்துவதில் உண்டாக்கிய வேலைச்சக்தியிற் சிறிது ஒளிச்சக்தியாக மாறுகின்றது. உஷ்ணசக்தியிலிருந்து ஒளியுண்

டாக்குவதற்கு ஒரு உதாரணங்காட்டி இவ்வதிகாரத்தை முடிப்போம். ஒரு இருப்புக்கழியை உலையில்வைத்துக் காய்ச்சுவதாகக் கொள்வோம். உஷ்ணம் அக்கழியில் ஏறுகிறது. முதலிற் கழி கருப்பாக இருக்கிறது. பிறகு மங்கலான செந்நிறமுள்ள ஒளியை வீசுகிறது. மேலும் உஷ்ணமளித்துச்சென்றால், கழியானது மிகவும் சிவந்து பின்னர் வெண்மையாகப் பிரகாசித்து வெள்ளொளியை வீசுகின்றது. கழியை உலையிலிருந்து எடுத்துவிட்டால், சக்தியானது கழியைவிட்டு உஷ்ணமாக வெளியேறிப்போகவும், அதிலுள்ள ஒளி குன்றி அது தனது கருத்த மேனியை மீண்டும் பெறுகின்றது. இவ்வுதாரணங்களால் ஒளியும் சக்தியின்பரிபாகமே என்று ஒருவாறு விளங்கலாம்.

iv. ஒலி (Sound).

ஒலியானது இசையொலி (Musical Sound) என்றும், ஆரவாரம் (Noise) என்றும் இருவகைப்படும். குயிலினோசையும் குழலினோசையும் போன்று ஒழுக்கத்தோடு நடைபெறுவது இசையொலியாகும். நாய்குரைத்தலும் சந்தைக் கூக்குரலும் போன்ற ஒழுக்கமற்ற ஓசை ஆரவாரமெனப்படும். ஒரு சங்கீதசபையிற் பலவாத்தியங்களை வாசிப்பவர்களில் ஒவ்வொருவரும் எவ்வளவு இனிமையாக இசையொலிகளை யெழுப்பினும், அவர்கள் ஒருவர்க்கொருவர் பொருத்தமுறாமல் வாசிப்பார்களேயானால், சபையோர்கள் கேட்பது ஆரவாரமாகுமேயன்றி இசையொலியாகாது. எனவே, ஒழுக்கமற்ற சேர்க்கையால் இசையொலிகளும் ஆரவாரமாதல் விளங்கும். ஒலியென்னும் சாஸ்திரப்பகுதியில் ஆரவாரம் விலக்கப்பட்டு இசையொலியே ஆராயப்பெறும்.

ஒலியின்விஷயத்தை அலைச்செலவியல் (Wave Propagation), ஒலியளவியல் (Acoustic Measurements), ஒலிக்கருவியியல் (Acoustic Instruments), சுரவியல் (Consonance and Temperament) என நான்குப்பகுதிகளாகப் பிரிக்கலாம். இவ்வியல்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வோம்.

அலைச்செலவியல் (Wave Propagation).

தனியிசைத்துடிப்பு (Simple Harmonic Motion):— ஒலிக்கு முக்கிய காரணம் துடிப்பேயாகும். ஒரு பிடில்கம்பியை விரலினால்

இலேசாகத் தெறித்தால் ஒலியுண்டாகிறது. ஒலிக்கும் கம்பியைத் தொட்டால் அதனுடைய துடிப்பை உணரலாம். இதனை ஆங்கிலத்தில் ஆசிலேஷன் (Oscillation) என்பார்கள். துடிப்பு, வேபநம், ஊசலாட்டம் என்னும் சொற்கள் ஒரேபொருளினை யுணர்த்தும். ஒரு தனியொலி (Pure Sound) சுத்தமாக (அதாவது வேறு தனி ஒலிகளின் கலப்பின்றி) உண்டாகவேண்டின், துடிப்பு (Oscillation) ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்டவகையில் ஏற்படவேண்டும். இத்தகைய துடிப்பினைத் தனியிசைத்துடிப்பு அல்லது சுத்தஸ்வரவேபநம் (Simple Harmonic Motion) எனக் கூறுதல் தகும்.

படம் 32-ல் வரைந்துகாட்டிய கருவியமைப்பினைக்கொண்டு தனியிசைத்துடிப்புக்களை (Simple Harmonic Oscillations) உண்டாக்கலாம். ம என்னு மோர் சிறு ஈயக்குண்டானது க என்னும் ஆணியிற் கட்டியதோர் வெகு மெல்லிய நூலினுற் றூங்கப்பட்டு அசையாது நிற்கின்றது. இக்கருவிக்குப் பெண்டுலம் (Pendulum) அல்லது இலம்பகம் எனப் பெயர். இவ்விலம்பகத்தின் குண்டைப் ப வென்னுமிடத்தில் இழுத்துவைத்து விடுத்தால், அது தனது நிலைப்பிடம் (Position of Rest) ஆகிய ம வுக்குத் திரும்பி வரும். அப்படி வரும்போது, ம வுக்குச் சமீபத்தில் நெருங்க நெருங்கக் குண்டின்வேகம் அதிகரிக்கும். ம வுக்கு வந்ததும் குண்டின் வேகமானது மிகவும் அதிகமாயிருக்கும். அவ்வேகத்தின் காரணமாக, குண்டானது ம வில் நின்றுவிட இயலாமல் அவ்விடத்தைத் தாண்டிச் செல்லும். ஆனால், ம வுக்கு அப்பால் குண்டானது செல்லச் செல்ல அதன் வேகம் குறைந்துபோகும். ர வுக்கு வந்ததும் வேகமுழுதும் நசித்துப்போகும். ஆனால், ரவில் அது நின்றுவிடாது, மீண்டும் ம வினை நோக்கி வீழ்ந்து செல்லும். அப்படிச் செல்லுங்கால் அதன் வேகம் வர வர அதிகரிக்கும். ம வுக்கு வந்ததும் அதன் வேகம் ப வினை நோக்கி மிக அதிகமாகவிருக்கும். இவ் விசையின் காரணத்தால், குண்டு மறுபடியும் ப வினை நோக்கிச் செல்லும். அவ்விதம் செல்லவே அதன் வேகம் சிறிதுசிறி



படம் 32.

தாகக் குறைந்து ப வினை யணுகிவந்ததும் நசித்துவிடும். இப்பொழுது குண்டானது தனது ஆரம்பநிலைக்கு வந்து, அடுத்த ஊசலாட்டத்திற்குச் சித்தமாயிருக்கிறது. இலம்பகக்குண்டு ம வுக்கு முன்னும் பின்னுமாக ஊசலாடிச் செல்லவே, அது தனியிசைத்துடிப்பு அல்லது சுத்தஸ்வரவேபநம் (Simple Harmonic Motion) என்னும் ஊசலாட்டத்தை இயற்றுகிறது. இவ்வூசலாட்டத்தின் காரணமாக, இலம்பகக்குண்டிலிருந்து தனியொலி (Pure Sound) வெளிப்படுகிறது. இத்தனியொலி காதிற்குப் புலப்படவில்லையே யென்ற வினு எழக்கூடும். இதற்குக் காரணம் பின்னர்க் கூறுவோம். இப்பொழுது, தனியிசைத்துடிப்பினைச் சார்ந்த சில குறியீட்டுச் சொற்களைக் கூறி இத்துடிப்பினது முக்கிய இலக்கணத்தை நிச்சயிப்பதே ஏற்புடைத்தாகும்.

இலம்பகக்குண்டினை எவ்வளவு சிறிதாகவேண்டுமானாலும் இயற்றிக்கொள்ளலாம். அதனைத் தனது நிலைப்பிடத்திலிருந்து சிறிது தூரமே நீக்கிவிடுத்தால், குண்டினது பாதையாகிய ப ம ர வென்னும் கோடு ஏறக்குறைய ஒரு நேர்கோடாகவேயிருக்கும். எனவே படம் 33 ல், ம என்னும் புள்ளியைத் தனது நிலைப்பிடம் (Position of Rest) ஆகக் கொண்ட ஓர் அணுவானது படம் 32ல் காட்டிய வண்ணம் ப ம ர என்னும் பாதையில் இலம்பகக்குண்டுபோல ஊசலாடிற்றுல் அதனுடைய அசைவு தனியிசைத்துடிப்பு (Simple Harmonic Motion) எனப்படும். இவ்விதம் துடிக்கும் அணுவிலிருந்து தனியொலி (Pure sound) உண்டாகும். இவ்வணுவானது, நிலைப்பிடமாகிய ம விலிருந்து புறப்பட்டுப் ப வுக்குச் சென்று மீண்டும் ம வுக்கு வரும்வரை இயற்றும் அசைவுக்கு அரைத்துடிப்பு (Vibration) எனப் பெயர். இவ்வணுவானது ம ப ம ர ம என்ற வழியே சென்று இருமுறை தனது நிலைப்பிடமாகிய ம வினை ஒரேதிசையாக (அதாவது இடதுபுறமே) கடந்து செல்வதற்கிடையே அது நிகழ்த்திய அசைவுக்குத் துடிப்பு அல்லது வேபநம் அல்லது ஊசலாட்டம் (Oscillation) எனப் பெயர். ஒரு துடிப்பு நிகழ்வதற்குவேண்டிய காலம், அதாவது இவ்வணு ம வினைத் தொடர்பாக இருமுறை ஒரேதிசையிற் கடந்து



படம் 33.

செல்வதற்கிடையே செலவாகும் காலவளவிற்குத் துடிப்புக்காலம் (Period of Oscillation) எனப் பெயர். ஒரு அணுவானது 10 செக்கண்டுகாலத்தில் 50 முறை துடிக்குமானல் அதனுடைய துடிப்புக் காலம் 10÷50 அதாவது ஒரு செக்கண்டில் ஐந்திலொருபங்கு ஆகும். எனவே இவ்வணு ஒரு செக்கண்டில் 5 முறை துடிக்கின்றது. ஒரு செக்கண்டிலேற்படும் துடிப்பு விழுக்காடு துடிப்பெண் (Pitch or Frequency) எனப்படும். ஆகவே, அணுவின் துடிப்பெண் 5 எனக் கிடைக்கின்றது. இவ்வணுவானது ஊசலாடுங்கால், அதனுடையநிலைப் பிடமாகிய ம விலிருந்து ம ப, ம ர என்றவளவு தூரங்களுக்கு இடம் பெயருகின்றது. இந்த ஊசலாட்டத்தூரத்தை (Extent of Swing), துடிப்புவிரி அல்லது வேபநாக்ருதி (Amplitude) எனலாம். துடிப்பு விரி என்றால், துடிப்பின் விரிவு எனப் பொருள்படும்.

மேற்கூறிய இலம்பகவாராய்ச்சியை கி. பி. 16-வது நூற்றாண்டில் இத்தாலியாதேசத்து வானசாஸ்திரியான கலீலவர் முதன்முதலாகச் செய்தார். அவரது ஆராய்ச்சியின் முடிவுகளிலொன்றைமட்டும் இங்குக் கூறுவோம். அது யாதெனின், ஒரு குறிப்பிட்ட இலம்பகத்தின் துடிப்புக்காலம் (Period), துடிப்புவிரி (Amplitude) பெரிதானலும் சிறிதானலும் ஒரேயளவினதாயிருக்கும், என்பதே. இலம்பகம் ஆடிச் செல்லச் செல்ல அதனுண்டய துடிப்புவிரி குறைந்துபோகும். இவ்விதமாக அதன் துடிப்புவிரிகுறைந்துசெல்லுங்கால் 10 துடிப்புகள் நிகழுங் காலத்தைப் பன்முறையாக அளந்துபார்த்தால், காலவளவு ஒன்றாகவேயிருக்கும். எனவே ஒருதனியிசைத்துடிப்பின் துடிப்பெண் (Frequency) துடிப்புவிரி (Amplitude) எவ்வாறாயிருந்தாலும் ஒரேயளவினதாயிருக்குமென்பது விளங்கும்.

இனி, இலம்பகம் ஆடும்பொழுது ஏன் ஒலி கேட்கவில்லையென்பதற்குக் காரணங்கூறி, வேறுவழியாகத் தனியிசைத்துடிப்பை உண்டாக்கித் தனியொலி (Simple sound) எழுப்பும்விதத்தைச் சற்றுக் கவனிப்போம்.

மக்கள் சாதாரணமாகக் காதினாலுணரக்கூடிய தனியொலிகள் ஓரளவுக்குட்பட்டனவாகும். ஒரு ஒலியினது துடிப்பெண் 38,000-த்திற்கு மேலாகவோ அல்லது 16-க்குக் குறைவாகவோ இருந்தால் அது காதினால் உணரப்பெறாது எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு இலம்பகத்தை வெகு நுட்பமாக அமைத்துக்கொண்டாலும், அதனுடைய துடிப்பெண்ணை 10-க்குமேல் அதிகமாக்க இயலாது. இலம்பகத் துடிப்புகள் இவ்விதம் மெதுவாயிருப்பதினாற்றான், இலம்பகம் ஆடும்பொழுது நமக்கு ஒலி செவிப்புலனாவதில்லை. வேறொரு கருவியைக் கொண்டு தனியிசைத்துடிப்புக்களை வேகமாக நிகழும்படிசெய்தால், ஏற்படும் தனியொலியைக் காதினாற் கேட்கலாம். இத்தகைய கருவி படம் 34-ல் வரைந்துகாட்டப்பட்டிருக்கிறது. எங்கும் ஒரே பருமனுள்ள கமவென்னு மோர் எஃகுக்கம்பியானது ஒரு விட்டத்தில் உறுதியாகப் பதிக்கப்பட்டு நெட்டுக்குத்தாக நிற்கின்றது. இக்கம்பியின் கீழ்நுனியைக் கையினாற் சற்றுப் பிடித்து இழுத்துவிட்டால், கம்பி வேகமாகத் துடிக்கும். துடிப்பைக் கண்ணாற் பார்க்கலாம். துடிக்கவே இசையொலி தெளிவாகக் கேட்கும். துடிப்பு அடங்கியதும் இசையொலியும் அடங்கிவிடும். இவ்விதமாகத்துடிக்கும்



படம் 34.

கம்பியின் கீழ்நுனியாகிய அணுவைமட்டும் கவனிப்போம். இவ்வணுவானது புமர வென்னும் மார்க்கத்தில் படங்கள் 32, 33-களிற் காட்டிய வண்ணமாகத் துடிக்கின்றது. இவ்வணுவினத் துடிப்பும், இலம்பகக் குண்டினது துடிப்பையேபோலிருப்பதோடு, அதனைக்காட்டிலும் வெகு வேகமாக நடைபெறுகிறது. இவ்வித்தியாசந்தான் இலம்பகத்தில் ஒலி கேட்கப்படாததற்கும் இக்கம்பியிற் கேட்கப்படுவதற்கும் காரணம். படம் 34-ஐ நோக்கினால், கம்பிநுனியிலுள்ள அணுவோடுகூடக் கம்பியிலுள்ள அணுக்கள் ஒவ்வொன்றும் தத்தமது நிலைப்பிடங்களுக்கு முன்னும் பின்னுமாகத் தனியிசைத்துடிப்புக்களை நிகழ்த்திச் செல்வதைக் காணலாம். எல்லா அணுக்களும் ஒரே தருணத்தில் தத்தமது நிலைப்பிடத்தைவிட்டுப் புறப்படுகின்றன. அணுக்களெல்லாம் ஒரேதிசையாக, கமவுக்கு இடப்புறமோ அல்லது வலப்புறமோ சேர்ந்தே செல்லு

கின்றன. அவை ஒரே தருணத்தில் ஒரு முழுத் துடிப்பினைமுடித்துத் தத்தமது நிலைப்பிடங்களுக்கு வந்துசேர்தலால் இக்கம்பியிலுள்ள அணுக்களெல்லாவற்றிற்கும் துடிப்புக்காலம்ஒன்றாகும். ஆகவே அவற்றின் துடிப்பெண்ணும் (Frequency) ஒன்றேயாகின்றது. எனவே இக்கம்பியிலுள்ள அணுக்களெல்லாம் ஒரே இசையொலியை யுண்டாக்குகின்றன. இனி, கம்பியை இலேசாகவும் விரிவாகவும் துடிக்கவைப்பதால் (அதாவது துடிப்புவிரி குறைவாகவும் அதிகமாகவும் இருக்கும்பொழுது) ஒலியில் என்ன மாறுபாடு ஏற்படுகின்ற தென்பதைக் கவனிப்போம். கம்பியினது நுனியை 1, 2, 3, மில்லிமீட்டர் தூரம் விலக்கி ஆடவைத்து முறையே ஒவ்வொருதடவையும் கேட்கப்படும் ஒலியை ஆராய்வோம். ஆட்டவிரிவு அதிகப்பட அதிகப்பட ஒலியினது கனம் அல்லது உறைப்பு (Intensity) அதிகரித்துச்செல்லுகிறது. முதன்முறை, ஒலி வெகு இலேசாகவும் இரண்டாமுறை சாதாரணமாகவும் மூன்றுமுறை மெத்தக் கனத்தோடும் கிளம்புகின்றது. ஆனால், இம்மூன்று ஒலிகளும் ஒரே சுரங்களாக (Notes) இருக்கின்றன. இனி இக்கம்பிக்குப் பதிலாக இதிற் பாதிநீளமேயுள்ளகம்பியை நிறுத்தி அதனுடைய ஆட்டத்தையும் சுரத்தையும் கவனிப்போமானால், அதனுடைய துடிப்பு முந்தியதைக் காட்டிலும் அதிகவேகமாயிருக்கின்றது; மேலும் கேட்கப்படும் சுரம், முந்தியசுரத்திற்கடுத்தமேல்ஸ்தாயியாக இருக்கின்றது. இவ்வாராய்ச்சியிலிருந்து துடிப்புவிரியின் (Amplitude) மாறுபாட்டினால் சுரம் மாறாது என்பதும், துடிப்பெண்ணின் (Frequency) மாறுபாட்டினாலேயே சுரத்தின் சுருதி (Pitch) ஏறுகின்றதென்பதும் எளிதில் விளங்குகின்றது. மேலும் கம்பியினது நீளத்தை ஏற்றவாறு அமைத்துக்கொண்டால், அதிலிருந்து ஏற்ற துடிப்பெண்களையுடைய சுரங்களை உண்டாக்கலாமென்பதும் விளங்குகின்றது.

(தொடரும்).

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௩௯௪-ம் பக்கத்தொடர்ச்சி]

திரிசிரா இராமனை எதிர்த்தலும் இறத்தலும்.

[பன்னான்கு படைத்தலைவரும் அவர்கள் படைகளும் பட்டது கண்டு, கரனுடைய இரண்டுதம்பியருள் இளையவனும் முக்கட்கடவுளின் மூத்தலைவேலெனும் சூலம்போல மூன்றுதலையுள்ளவனுமான திரிசிரா, தன் சேனையோடு வந்து இராமனை எதிர்த்தான். அந்தச் சேனை சூழ்ந்த இராமன் இருளின் நடுவே இலங்கும் விளக்குப்போன்றான். அந்தப் படைக்கு எதிராகத் தன் சரங்களே படையாக, அவன் போர் புரிந்து அந்தப் படையை அழித்தான். சேனை மடிந்ததுகண்டு, திரிசிரா, தேரை இராமன் எதிரே செலுத்திச் சரமாரி பெய்து அவனை மறையச்செய்தான். இராமன் அம்புகள் எய்து திரிசிராவின் சரக்கூடத்தை அறுத்தொழித்து, அவன் தேரை அழித்ததல்லாமல், மூத்தலைகளையுடைய அவனை இருதலைகளையும் போக்கி ஒருதலையனாக்கினான். அவன், தேரழிந்தும் திரிசிரா வென்னும் பேரழிந்தும் வீரம் அழியாதவனாய், வில்லில் அம்புகள் தொடுத்து விடத்தொடங்க, இராமன் அவன்வில்லை அறுத்தொழித்தான். அவன், வில்லொழியவே கல்லுகளை யெறிந்தான். இராமன் கல்லெறிந்த கைகளை அரிந்து எஞ்சியிருந்த தலையையும் அரிந்து தள்ளினான்.

திரிசிரா செத்துவிடவே, சேனைவீரரெல்லாம், திகிலே உருவெடுத்தாற்போன்று திரள்திரளாகத் திசைதெரியாமற் பின்கால் பிட்டந்தட்ட ஓட்டமெடுத்தார்கள். அவருள்ளே சிலர், இராமன் அம்பால் அறுப்புண்டு திறந்திருந்த ஆனைவயிற்றுப் புழைகளினுள்ளே நுழைதலுற்றார்கள். சிலர், தாம் ஓடும்வழியில் ஆடும் கவந்தங்களைப்பார்த்து "அப்பா! என்னைக் கண்டேனென்று செப்பாதே! உன்னைக் கும்பிட்டேன்" என்று கைகூப்பிக்கொண்டு ஓடினார்கள்.

புறங்காட்டியோடும் போர்வீரரைக் கரன் தம்பி தூடணன் கண்டு மறித்து நிறுத்தி "அஞ்சாதேயுங்கள். யான் உங்களுக்கு உரைப்பது ஒன்று உண்டு; கேளுங்கள்" என்று கிளத்துவானாயினான்.]

இதுமுதல் ஆறுகவிகள் தோற்றேடுவோரைநோக்கித் தூடணன்செய்த ரணரங்கப் பிரசங்கம் என்னும் போர்க்களச் சொற்பொழிவு.

383 "வச்சை யாமெனும் பயம்மனத் துண்டென வாழும்
கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிரும் கூசார்
நிச்ச யம்மெனும் கவசந்தான் நிலைநிற்ப தன்றி,
அச்சம் என்னும்ஈ தாருயிர்க் கரும்துணை ஆமோ?"

இ-ள். "(இவர்களுடைய) நெஞ்சில் அச்சம் உண்டு என்று சொல்லும்படி உயிர்வாழ்கின்ற இழிவான மனித(சாதியின)ருக்கு(இராக்கதசாதியினராகிய நம்முள்ளே) பெண்களுமே பயப்படமாட்டார்கள். (அப்படியிருக்க, இப்படி நீங்கள் ஒருமனிதனுக்கு அஞ்சி ஓடலாமோ? சயிப்பேம் அல்லது சாவேம் என்னும்) மனத்துணிவாகிய கவசமே (போர்க்களத்தில் ஊறுபடாமல் உயிருக்கு உறுதுணையாய்) நிலைநிற்கக்கூடியதல்லாமல் அச்சமென்று சொல்லப்படுகின்ற (இப்போது உங்களிடத்திற் காணப்படுகின்ற) இந்தக் குணம் உங்களுயிருக்குத் துணையாகுமோ?"

வச்சை—உலோபம். [வச்சை—உலோபம். (உ-ம்) "கடுவச்சையன் போலொர் மன்னன் (இராமா. பாலகா. பூக்கொய். ௧௧.) தமிழ்ச்சொல்லகராதி.]. ஆம்-போலும். வச்சை ஆம் எனும் பயம்- ("உத்தம குணங்கள் கோடி உலோபத்தால் அழியும் மாதேச" என்றவாறு, தன்னையுடையவனது உயர்குணங்கள் எவ்வளவாயிருந்தாலும் அவ்வளவையும் கெடுத்துவிடும் இழிகுணமான) உலோபகுணம் (ஒன்றே, எல்லா இழிகுணங்களுள்ளும், தன்னை) ஒக்குமென்று சொல்லப்பட்ட பயம். "ஆள்வா ரிலிமா டாவேனோ" என்பதில் ஆதல் போலுதலெனப்பொருள் படல்கொண்டு, ஆம் என்பதற்குப் போலுமென்று பொருள் செய்யப்பட்டிருப்பது காண்க. முந்திய உரைகாரிருவர் 'வச்சை' என்பதற்கு 'வசை' என உரைகூறியுள்ளார். ஒருவர், "வசையென்பது, எதுகை நோக்கி, வச்சையென விரிந்தது" என்றார். மற்றொருவர், "வச்சை - வசை; விரித்தல்விகாரம்" என்றுகூறிப் பின்பு "வச்சை—பெண்பிள்ளை, யாம் எனும்—நாங்கள் என்கின்ற எனினுமாம். இப் பொருளில் வச்சை-வத்ஸே என்னும் வடமொழித் தற்பவம்." என்றார்.

கொச்சை - இழிவு. மாந்தர் - மனிதர். கோல் - திரட்சி-உருண்டை. கோலுதல் - வளைதல். வளை - கைவளை. கோல் வளை —(பிரம்புபோல) உருண்டைவடிவமான வளையல்; வளைந்த (தன்மையுடைய) வளையல். கூசுதல் - அஞ்சுதல் ("கூசி ஆவி குலைவுறு வானையும்" நிந்தனைப்படலம். 22). நிச்சயம் - உறுதி - மனஉறுதி - மனத்துணிவு - அஞ்சாமை. உடம்பு ஊறுபடாமற் காக்கும் கவசம்போல, மனத்துணிவு, உயிர் ஊறு உறாமற் காத்தலின், கவசமெனப்பட்டது. அரும் துணை என்பதில் அருமை மேன்மையென்னும் பொருளுடையது.

மற்றைச்சொற்களை நோக்கக் கொச்சைச்சொற்கள் இழிவாதல் போல, இராக்கதரைநோக்க, மனிதர் இழிவானவரென்பான் "கொச்சை மாந்தர்" என்றான்.

'அச்சம் என்னும் ஈது' என்ற சொற்றொடரில், 'என்னும்' என்ற சொல் 'அச்சம்' கேள்விப்பட்ட பொருளென்பதையும் 'ஈது' என்ற சொல் அது நேராகக் கண்ட பொருளென்பதையும் குறிப்பிக்கின்றன. குறிப்பிக்கவே, 'அச்சம் என்னும் ஈது' என்பதற்கு அச்சமென்று (பிறர்) சொல்ல (யான் கேள்வி)ப் பட்ட (இப்போது உங்கள்பால் யான் காண்கின்ற) இந்தக் குணமென்பது விரிவுரையாம். ஆகவே, அச்சமென்பதை, யான் போரை அறிதற்குமுன், கேட்டறிந்ததன்றிப் பார்த்தறிந்ததில்லை; போரை அறியலானபின், அதனை, அந்நாட்போர்களில் அரக்கருக்கு அஞ்சிய ஓடிய அமரர் இயக்காதியோர்பாலும் இந்நாட் போரில் ஒரு மனிதனுக்கஞ்சியோடிய உங்கள்பாலும் பார்த்தறிந்தேன்; எந்நாளினும் சுவாநுபவமாக அநுபவித் தறிந்திலேன் என்பான் 'அச்சம்' என்றமையோடமையாமல் 'அச்சமென்னுமீது' என்றான் என்க. இவ்வாறு ஓசை நிரப்புதற்காக உபயோகிக்கப்பட்டனபோலத் தோன்றும் சொற்கள் ஊன்றி நோக்குங்கால், பொருள் பொதிந்தவையாகக் காணப் படுதலைக் கம்பராமாயணத்திற் கணக்கற்ற இடங்களிற் காணலாம்.

அச்சம் துணையாக ஓடும்போது, எதிரியாற் கொல்லப்படாமல் தப்புதல்போலக் கொல்லப்படுதலும் கூடும்: அவ்வாறே, அஞ்சாமை துணையாக எதிர்த்துப் போர்புரியும்போது எதிரியைக் கொன்று தன் னுயிரைக் காத்தல்போல எதிரியாற் கொல்லுண்ணலும் கூடும். ஆதலால் உயிர்காத்தற்கு வெவ்வேறுவகையில் உதவும் அச்சம் அஞ்சாமை

என்னும் துணைகளுள், அச்சம் கீழ்மையான துணையும் அஞ்சாமை மேன்மையான துணையுமாம் என்பதுகொண்டு எதிர்மறைவினவாக "அச்சம் என்னும் ஈது ஆருயிர்க்கு அரும் (—மேன்மையான) துணையாமோ?" என வினவி அச்சத்தின் கீழ்மையை வற்புறுத்தினனென்க.

384. "பூஅ ராவுவேற் புரந்தர னோடுதான், பொன்று
மூவ ரோடுதான், முன்னின்று முட்டிய முனையில்,
ஏவ ரோடினர் இராக்கதர்? நுமக்கிடைந் தோடும்
தேவ ரோடுகற் றறிந்துளி ரோ?மனம் திகைத்தீர்."

இ-ள். "தேவேந்திரனோடும் திரிமூர்த்திகளோடும் எதிர்நின்று தாக்கிய போர்களில் இராக்கதர்களில் யார் ஓடினார்கள்? (அந்தப் போர்களில்) உங்களுக்குப் பின்னிட்டோடிய தேவரிடம் (இவ்வாறு புறங்காட்டி ஓடுதலைக்) கற்றுத் தெரிந்துகொண்டீர்களோ?"

பூ - அழகு; பொலிவு; கூர்மை. வேல் - வேலாயுதம்; ஆயுதப்பொது. பூ அராவு வேல் - கூர்மையான அராவப்பட்ட ஆயுதங்களையுடைய. இந்த அடை புரந்தரனுக்குப் பொருந்துவதேயன்றி மூவருக்கும் பொருந்துவதாகக்கொள்ளலாம். புரந்தரன் - இந்திரன். பொன்று - சாவாத. முனை - போர். ஏவர் - எவர். இடைதல் - பின்னிடல். தேவரோடு - தேவரிடத்தில். திகைத்தீர் - பிரமையடைந்தீர்கள்; பிரமை அடைந்தோரே என்று விளியாகவும் கொள்ளலாம். அறிந்துளி ராமெனத் திகைத்தீர் என்பதும் பாடம்.

"தான் என்ற இரண்டும் உயர்வுசிறப்புப்பொருள் விளக்கும். புரந்தரன் (பகைவர்) நகர மழிப்பவன். மூவர் - தொகைக்குறிப்பு; அயன் அரி அரன். ....தேவரோடு என்ற இடத்து, மூன்றனுருபு ஏழனுருபின்பொருளில் வந்தது, உருபுமயக்கம். இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படி மூன்றனுருபு, ஏழனுருபின்பொருளில் வருதலை, 'வெருவரும்படி பலகலை விதங்களும் வீடுமனுடன்கற்றார்', 'கண்டுதான் அவன் றனோடு கற்பதற் குன்னி னானே' என்ற இடங்களிலுங் காண்க."

385. "இங்கொர் மானிடற் கித்தனை வீரர்கள் இடைந்தீர்!
உங்கை வாளொடு போய்விழுந் தூர்புக லுற்றீர்!
கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புறு்ம் கொழும்கண்
நங்கை மார்களைப் புல்லுதி ரோநலம் நுகர்வீர்?"

இ-ள். "இங்கே ஒரு (தனி) மனிதனுக்கு இத்தனை (எண்ணிறந்த) வீரர்களும் பின்னிட்டோடலுற்றீர்கள்! (போர்க்களம்விட்டோடுவோர்க்கு வாட்படை எதற்கென்று பார்ப்பவர் சிரிக்க) உங்கள்கையில் வாள் வைத்துக்கொண்டு (ஒருவர்மேலொருவர் மூட்டி) விழுந்து (கொண்டு ஓடிப்) போய் ஊருக்குள்ளே (ஒளிக்கப்) புகுதலுற்றீர்களே. (ஒளித்ததே யன்றி, ஒளித்த இடத்திலே வெட்கமின்றி) இன்பம் அநுபவிப்பீருமாய் உங்கள் மனைவிமாரை அவர்கள் கொங்கை உங்கள் நெஞ்சில் முங்கத் தழுவுவீர்களோ?"

இடைதல் - பின்னிடல். குளித்தல் - முழுகுதல் - முங்குதல். கொழுமை - இளமை; அழகு. உம் கொழும் கண் நங்கைமார் - உங்களுடைய அழகிய கண்களையுடைய மனைவிமார். புல்லுதிர் - புல்லுவீர் (ஆகி) - புல்லி என வினையெச்சப்பொருள்பட்டது; புல்லுதல் - புணர்தல். நலம் - இன்பம் - சுகம். நுகர்தல் - அநுபவித்தல். புகழ்விழுந் தூர்புக விரைந்தீர் என்பதும் பாடம்.

"இத்தனை வீரர்களாயிருந்தும், கைப்படைக்கலத்தை யிழவாதிருந்தும், ஒரு மனிதனுக்கு அஞ்சி யோடி யொளிக்கலுற்று ஆண்மை யிழந்த நீங்கள் நாணமின்றி எங்ஙனம் உங்கள்மகளிரைச் சேர்வீரென இகழ்ந்தான். அன்றியும், இதில், உங்கள் ஆண்மை எதிரியின்முன் நின்று பொருது வெல்லுதற்கு அமையாமல் மெல்லியவரான மகளிரை அணைதல்மாத்திரத்துக்கே அமைந்ததுபோலுமென்றமையுந் தோன்றும்; 'வரைத் தடம்புயம் வளர்த்தது மகளிர்போர் பொரவோ' என்றது, இங்குக் கருதத்தக்கது. இந்தச் சந்தர்ப்பத்தில் 'வீரர்கள்' என்றது இகழ்ச்சி; அன்றி, முன்பு பல போர்களில் இந்திரன்முதலியோர்முன்னும் பின்னிடாதிருந்தநிலையைப்பற்றிக் கூறினதாகவுமாம். கைப்படைக்கலத்தை யிழப்பின் ஒருகூற் பின்னிடைதலுமாம்; அதனை யிழவாமலே பின்னிடைதல் மிக்க இழிவாமென்பதை விளக்குவான் 'உங்கை வாளொடு போய்' என்றான்".

386. "செம்பு காட்டிய கண்ணிணை பாலெனத் தெளிந்தீர்!
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிந்உறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோ?தட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோ?குல மங்கையர்க் கம்மா!"

இ-ள். "(போர்செய்யப் புகுந்தபோது சினத்தினாற் சிவந்து) செம்பு (உருக்கப்பெற்றாற்போலச் செந்நிறம்) காட்டின (உங்கள்) கண்கள் (இப்போது பயத்தினால் அந்தச் செந்நிறம் நீங்கி வெளுத்துப்) பால்போல (வெண்ணிறங் காட்ட)த் தெளிதலுற்றீர்கள். (விழுப்புண்ணாகிய மார்புப் புண் கண்டாற் கனிந்து மகிழ்தலும் வழுப்புண்ணாகிய முதுகுப்புண் கண்டால் முனிந்து இகழ்தலும் தம் இயல்பாகவுள்ள) குலமாதர் (களான உங்கள் மனைவிமார்)களுக்கு (நீங்கள் ஓடும்வழிகளில் உள்ள) காடுகளில் நுழையுந்தோறும் (உங்கள்) முதுகில் அழுந்தக் குத்திப் புகுந்த கொம்பு (பட்ட புண்களைக்) காட்டுவீர்களோ? (எதிர்த்துச் செய்த போரில்) மார்பில் தைத்த அம்பு (பட்ட புண்களைக்) காட்டுவீர்களோ?"

இணை - இரண்டு. வெம்புதல் - கொதித்தல். வெம்புகாடு - பாலைவனம். வெரிந் - முதுகு. உற - பொருந்த - அழுந்த. உறுதல் மிகுதலுமாம். காட்டுதிர் - காட்டுவீர். தடம் - அகலம் - விலாசம். குளித்த - முழுகிய - புதைந்த. அம்மா என்பது, உங்கள்செயல் இரங்கத்தக்கது என்ற பொருள் குறித்து இரக்கச்சொல்லும், உங்கள்செயல் எதிர்பாராதது என்பது குறித்து அதிசயச்சொல்லும், ஒருபொருளும் குறியாது அசைச்சொல்லு மாம். தெளிந்தீர் வினைமுற்றாகக்கொண்டு உரைகூறப்பட்டது; தெளிந்தோரே என விளியாகவுங் கொள்ளலாம்.

கோபகாலத்திற் கண்களில் இயல்பாக உள்ள இரத்தத்தினும் அதிக இரத்தம் சுரத்தலாற் கண்கள் செந்நிறமாதலும், பயகாலத்தில் உள்ள இரத்தமும் உள்ளே இழுக்கப்பட்டுக் குறைந்து (கருவிழியைச் சுற்றி யிருக்கிற) வெள்விழி அதிக வெண்ணிறமாதலும் இயற்கை. இவ் வியற்கையுண்மை விளங்கச் 'செம்பு காட்டிய கண்ணிணை பாலென' என்றான். வெள்ளக்காலத்திற் சிவந்திருந்த நீர் வடிவுக்காலத்தில்

தெளிந்தநீராதல்போலக் கோபகாலத்திற் சிவந்திருந்த கண்கள் பய காலத்தில் தெளிந்த கண்களாயின என்பது புலப்படத் 'தெளிந்நீர்' என்ருன்.

பகைவருக்குப் பயந்தோடும் பாதை பாலைவனமாதலால் 'வெம்பு காட்டிடை' என்ருன். "பாலையைக் காட்டி அம் போதியைக் காட்டிப் பகைக்கியமன் - ஓலையைக் காட்டிய வேல்முத்து சாமி உசிதவெற்பில்—வேலையைக் காட்டுகண் மின்னேவெங் காம விடாய்க்குநறுஞ்—சோலையைக் காட்டி யிளநீ சிலையென்ற சூதுநன்றே" எனவருதல் காண்க. (அம்போதி - கடல்)

387. "ஏக்கம் இங்கிதன் மேலும்உண் டே?இகல் மனிதன்
ஆக்கும், வெம்சமத் தாண்மை,அவ் அமரர்க்கும் அரிதாத்
தாக்க ரும்புயத் துங்குலத் தலைமகன் தங்கை
மூக்கொ டன்றிஉம் முதுகொடும் போம்பழி முயன்றீர்!"

இ - ள் "இங்கே (நீங்கள் முதுகுகாட்டி ஓடுகின்ற) இந்த (இழிந்த கோழை)ச் செயலினும் அதிகமாகக் கவலைக்கிடமானது உண்டோ? (நீங்கள் ஓடுதலால், நம்பாற்) பகைமையுடைய (இந்த) மனிதன், (தன்) கொடிய போர்த்திறமையை அமரர்க்கும் அரிதானதாக ஆக்குவான் (அதாவது அமரர்கள் அளவிறந்தார் ஒன்றுகூடியும் செயிக்காத உங்களைத் தனியனுய்ச் செயித்தவனுவான்). (சத்துருக்கள்யாவராலும்) தாக்கவொண்ணுத (வலிய) தோள்களையுடைய உங்கள்குல முதல்வன் (ஆன இராவணனது) தங்கை (சூர்ப்பநகையின்மூக்கு அறுபட்டதனுல் ஏற்பட்ட பழிப்பும் போதாதென்று நீங்கள் முதுகுகாட்டியோடும் பழிப்பையும் உண்டாக்கி, அவள்) மூக்கோடல்லாமல் உங்கள் முதுகோடும் நீண்ட(காலம் நிலைக்கும்) பழிப்பை (உண்டாக்க)முயன்றீர்கள்!"

ஏக்கம் ஆகுபெயராய் ஏக்கத்துக்குக் காரணமெனப் பொருள்பட நின்றது. உண்டே என்பதில் ஏகாரம் எதிர்மறைப்பொருள் குறித்த வினவிடைச்சொல். இகல் - பகை. வெம்—கொடிய. சமம் - போர். அவ் அமரர் என்பதில் அகரம் பலரறிசுட்டு. போம்பழி—நீண்டபழி. போதல்—நீளல் (இலக்கியச்சொல்லகராதி). உண்டோ என்பதும் அரிதால் என்பதும் பாடங்கள்.

'இங்கு இதன்மேலும் ஏக்கம் உண்டே? (இதனால்) இகல் மனிதன் வெம் சமத்து ஆண்மை (யை) அவ் அமரர்க்கும் அரிதா ஆக்கும்' எனக் கொண்டுகூட்டிப் பொருள் கொள்ளப்பட்டது. முன்னுரைகாரரொருவர் 'இகல் மனிதன்..........அரிதா (–இல்லாததென்று சொல்லும்படி). தாக்கரும்..........முயன்றீர் இங்கு இதன்மேலும் ஏக்கம் உண்டே' என இயைத்துப் பொருள்கூறியிருத்தலும், மற்றொருவர் 'தாக்கரும்..........முயன்றீர் இகல் மனிதன் அவ் அமரர்க்கும் அரிதா வெம் சமத்து ஆண்மை ஆக்கும். ஏக்கம் இதன்மேலும் உண்டே' என அந்துவயித்து அருத்தஞ் செய்திருத்தலும் காண்க.

இறுதிபடியின் இனிய கவியின்பம் பன்முறை சுவைத்துப் பார்த்துப் பாராட்டற்பாலது.

388. ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ? அயில்வேல்
வீர வாட்கொடு வேல்மடுத் துழுதிரோ? வெறிப்போர்த்
தீர வாழ்க்கையில் தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையிர்! எங்ஙனம் வாழ்திரோ? விளம்பீர்.

இ-ள். போரிலே (எதிர்த்த) பகைவரிடமிருந்து பறித்த வீர வாள் (வந்தி) உள்ள கையையுடையோரே! (மானமின்றி முதுகுகாட்டியோடும் நீங்கள் இனிச் சத்திரியர்க்குரிய போர்த்தொழில்புரிதலால் சீவனஞ்செய்தல் பொருந்தாது. வேறு) சீவனத்தில் அமர (வேண்டுமே, அதற்குச் சத்திரியர்க்குத் தாழ்ந்த) வைசியராய் அமர்வீர்களோ? (அல்லது அவரினுந் தாழ்ந்த உழவராகி, முன் போர்க்குரியதாயிருந்து இப்போது அதற்கு ஆகாமற் போய்விட்ட) வேலையும் வாளையும் (கொழுவாகக்) கொண்டு (அவைகளைக்) கருவேலமாக் கலப்பைக்குத்திகளுட் புகுத்து (மாட்டி) உழுவீர்களோ? எவ்வாறு வாழ்வீர்களோ? சொல்லுங்கள்.

அமைதிர் - அமைவீர். அயில் - கூர்மை. மடுத்தல் - உட்புகுத்தல் (இலக்கியச்சொல்லகாதி). வெறி–ஆவேசம்; ஒழுங்கு (புத்துப்பாட்டு). வெறிப்போர்–வீராவேசத்துடன் அல்லது ஒழுங்குடன் பொரும் போர். 'உழுதிரோ வெறிபோர்' என்பதும் பாடம். இதற்கு "வீராவேசத்தை

யுடையபோர்" என்றும் எறிபொரெனப் பிரித்து "(ஆயுதங்களை) எறிகின்ற போர்" என்றும் பொருள்கூறப்பட்டிருத்தல் காண்க. தெவ்வர்-பகைவர். தெவ்வரை - உருபுமயக்கம். செரு - போர்.

வாழ்க்கையின் (-சீவனத்தில்) ஆர (-அமர) என மாற்றிப் பொருள் கூறப்பட்டது. இப்படி மாற்றாமல் 'ஆர வாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ' என்பதற்கு 'முத்துவிற்கும் சீவனத்தையுடைய வர்த்தகராய் அமைவீர்களோ' என முந்திய இரண்டு உரைகாரர் உரைசெய்திருத்தல் காண்க.

'அயில் வேல் வீரவாட்கொடு வேல்மடுத்து உழுதிரோ' என்பதற்குக் 'கூர்மைபொருந்திய வேலையும் வலிய வாளினையுங் கொண்டு (அவற்றைக் கொழுவாக மற்றைய) வேல்களிற் பொருத்தி உழுவீர்களோ' என்று ஓர் உரையாசிரியரும் 'கூர்மையுடைய வேலாயுதத்தையும் வலிமையுடைய வாளாயுதத்தையும் (உழுபடையாகக்) கொண்டு விளைநிலத்தில் ஊன்றவைத்து உழுதுவாழ்வீர்களோ'என்று வேறோருரையாசிரியரும் உரை கூறியுள்ளார்கள். பின்னையவர் 'வேலியென்ற கழனிப் பெயர் வேல் என விகாரப்பட்டதென அறிக' என்றார். முன்னையவர் முதலடியில் உள்ள வேலை இரண்டாம் அடியிலுள்ள 'மற்றைய வேலிற் பொருத்தி' யென்றார். இரண்டாம் அடியிலுள்ள 'வேல்' என்பதற்கு இயைபும் எளிதுமான பொருள் வேலமரம். 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி ; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்ற பழமொழியில், 'வேல்' கருவேலமரத்தைக் குறிப்பது யாரும் அறிந்தது. இப்பழமொழியிற் கருவேலமரத்தைக்குறிக்கும் வேல் பல்விளக்குவதவும் கருவேலமரக்குச்சியை உணர்த்துதல்போல, இப்பாட்டின் இரண்டாம் அடியிலுள்ள வேல் கருவேலமரக் கொம்பினாற் செய்யப்பட்ட கலப்பைக்குத்தியை உணர்த்தியது. கலப்பை மிகப் பெரும்பான்மையாகக் கருவேலமரத்தாற் செய்யப்படுவது யாவரும் அறிவர். ஆதலால், கருவேலமரத்தின் சுருக்கப்பெயரான 'வேல்' ஆகுபெயராய் அம்மரத்தினாற்செய்யப்பட்ட கலப்பையினது மண்ணைக் குத்தும் உறுப்பாகிய கலப்பைக்குத்தியை உணர்த்தியதாகக்கொண்டு உரைகூறப்பட்டது.

தூடணவதம்.

[தோற்றோடுவோரை நோக்கித் தூடணன் இவ்வாறு சொற்பொழிவு செய்து, தன்னுடைய வில்லினது வல்லமையைச் சற்று நின்று பாருங்களென்று கூறித் தன் சேனையுடன் இராமனை எதிர்ந்தான். "உன் சேனையைக் காத்துக்கொள்" என்று கூறிக்கொண்டு இராமனும் தூடணனை எதிர்ந்தான். தூடணனும் அவன் சேனாவீரரும் கணைகள் விட அவைகளை இராமன் தன் கணைகளாலறுத்தொழித்து மேற்கொண்டும் சரங்கள் தூரந்து சேனை முழுவதையும் சிதைத்து வதைத்தான். அதுகண்டு தூடணன் தன் தேரை இராமனெதிரே செலுத்தினன். அந்தத் தேர் அங்கங்கே குவிந்து கிடந்த பிணமலைகளின்மேலேறியும் இறங்கியும் இடறிப் பட்டபாடு இயம்ப இயலாததாயிருந்தது. அவன், மலையும் சிகரமும் போலத் தேருந் தானுமாக, அந்தகனெதிரே ஆவி சென்றாற்போல, இராமனெதிரே சென்று நின்று மூன்று அம்புகளை அவனுடைய நெற்றி இலக்காக விடுத்தான். அந்த அம்புகள் ஆனையினது நெற்றிப்பட்டம்போல இராமனுடைய நெற்றியில் விளங்கிய வீர பட்டத்திலே பட்டன. விண்ணவர் வெருவினர். இராமன் சிறிது சினந்து, சிறுநகைசெய்து, சிலகணைகள் செலுத்தித் தூடணனது தேரையும் வில்லையும் கவசத்தையுந் தொலைத்து "இந்தச் சரத்தைத் தடுக்கவல்லாயேல் தடுப்பாயாக" என்று புகன்று ஒரு சரம் தூரந்தான். அவன் சிரம் இழந்தான்,

கரன்வதை.

கரும் பரும் காத்திரமுடைய கொம்பானைபோல வக்கிரதந்தங்கள் வாயில் விளங்கும் கரிய பெரிய உருவமுடைய கரன், தன் தம்பி தூடணன் வீடினதும் அவன் சேனை அழிந்ததும் தெரிந்து சினந்து கடலிடைச் செல்லும் கப்பல்போலச் சேனை சூழச் செல்லும் தேரிற் சென்று இராமனை வளைத்தான். நால்வகைப் படைவீரரும் இராமன் மேல் அம்புகள் பொழிய, அவன் அவைகள் அழிய எதிரம்புகள் சொரிய, அவர்கள் கைவாள் உருவி வந்து எதிர்க்க, அவர்கள் மெய்யூடுருவ அம்பு விடுத்து அவன் அவர்களனைவரையும் கொன்றான். அதுகண்டு, கரன வெகுண்டு, கண்கள் கனல் சிந்தக் கைகள் கணை சிந்த, வந்து இராமனை எதிர்த்தான், இராமன், அவன் எய்த அம்புகளுக்கு எதிரம்புகள் எய்

தான். தீயினது சிவந்தநிறமும் காற்றினது கடியவிசையுமுடைய கணைகளைக் கான் தொடுக்க, இராமன் அந்த நிறமும் அந்த விசையுமுடைய அம்புகளால் அவைகளை அறுத்தான். அவன் மிக்க வலிமையுடைய ஒரு சரத்தை யெடுத்து, இதனால் இவனைக் கொல்வேனென்று கூறி, விசைத்து விடுத்தான். அதனால் இவன் வில் அறுபட்டது. படவே, இவனுக்கு வேறுவில் இல்லாமையை எண்ணி விண்ணவர் துண்ணென வெருவி வியர்த்து மெய்ந்நடுங்கினர். இவன், இறையளவு கவலையும் இல்லானாய்க் கையைப் பின்னே காட்ட, முன்னே தன்னிடம் கொடுத்துவைத்திருந்த பரசுராமன்வில்லை வருணதேவன் நீட்ட, வாங்கி வளைத்து, வாளிதொடுத்து அவனுடைய வலியதேரை யழியச்செய்தான். அவன் மலைமீது மழைமாரி பொழிந்தாற்போல, இவன்மீது சரமாரி சொரிந்தான். இவன், அந்தச் சரங்களைத் தன் கைச் சரங்களால் தடுத்து, அவன் வாளிதொடுக்கும் வலக்கரத்தை அறுத்து விழுத்தினன். அவன் மற்றொரு கைகொண்டு மரங்களையும் மலைகளையும் பிடுங்கியெறிய, இவன் அவனுடைய கரத்தை அறுத்ததுபோலச் சிரத்தை அறுத்தான்.

பூமியிலே தான் இருந்த இடந் தெரியாதபடி தன்னை வளைந்த இராக்கதர்சேனைக ளெல்லாவற்றையும் தன் சரங்களால் அழித்தொழித்து விளங்கிய இராமன், ஆகாயத்திலே தானிருக்குமிடந் தெரியாமல் தன்னை மறைத்த பனி முழுவதையும் தன் கிரணங்களால் அகற்றிப் பிரகாசிக்கும் சூரியன்போன்றான். அமரர்கள் அலர் பொழிந்தார்கள். முனிவர்கள் ஆசி மொழிந்தார்கள்.

இராமன் வெற்றிவீரனாய்ச் சீதாலக்குமணரிடம் திரும்புதல்.

உயிர் போர்க்களத்துக்குப் போய்விட, உணர்வொழிந்த உடல் போலிருந்த சீதையிடம் இராமன் திரும்பிவந்துசேர்ந்தான். சீதையும் இலக்குமணனும் அவன் காலிற் படிந்த அரக்க ரிரத்தமும் போர்க்களப் புழுதியும் போகக் கழுவுவார்போலக் கண்ணீர் பொழிந்து காலில் விழுந்து வணங்கினர்கள் அலையொலி மலியும் ஆழியி னடுவில் மகா விட்டுணு வைகுதல்போலச் சந்தோடத்தால் ஆரவாரித்துத் தன்னைச் சூழ்ந்து குழுமிய இமையவ ரிருடியர் குழாத்தின் மத்தியில் இராமன் இருந்தான்.

சூர்ப்பநகை கரனுடலைக் கட்டி யழுதல்.

இங்கே இராமன் முதலியோர் கூட்டமாயிருந்து குதுகலியாநிற்க, அங்கே சூர்ப்பநகை தனியே வருந்திக் கரனுடலைக் கட்டித் தழுவிக் கதறியழுது கவலைகூர்ந்திருந்தாள்.]

சூர்ப்பநகை தன்னை நொந்துகொண்டு இலங்கைக் கேகுதல்.

389. ஆக்கி னேன்மனத் தாசை ! அவ் ஆசைஎன்
மூக்கி னோடு முடிய, முடிந்திலேன் !
வாக்கி னால்உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கி னேன் ! கொடி யேன் ! என்று போயினள்.

இ - ள். என்மனத்தில் (இராமனைச் சேரவேண்டு மென்ற) ஆசையை விளைவித்தேன். அந்த ஆசை என் மூக்கோடு (முடிந்தது. அது அவ்வாறு) முடியவும் (யான் வெட்கத்தால்) இறந்தொழிந்தே னில்லை. (இறந்தொழியாத யான், 'என்னவர்களே ! இராமலக்குமண ரைக் கொல்லுங்கள்' என்று உங்களை ஏவி என்) வாய்மொழியினால் உங்கள் (செல்வ) வாழ்க்கையையும் (சீவ) நாட்களையும் தொலைத்தேன் (ஆதலால் யான் மிகவும்) கொடுமையுடையேனென்று கூறிக்கொண்டு (சூர்ப்பநகை இலங்கைக்கு) ஏகினாள்.

முடிதல் - முடிவுறுதல்—முற்றுதல்; சாதல். வாக்கு - சொல்.

இக்கவி நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாறே நிரல்பட நிகழ்த்து தற்கண் நெஞ்சம் நெக்குருக நிரம்ப நயம்பட நிகழ்த்தியிருத்தல் கவனித்தற் குரியது.

கான்வதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்
எழுதுவது.

[சஉகூ-ஆம்பக்கத் தொடர்ச்சி]

விளிமரபு.

118-வது சூத்திரம். விளியெனப் படுப கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்று மியற்கைய வென்ப.

இச்சூத்திரத்தில் விளிவேற்றுமையின்பொருளை என் ஆசிரியர் கூற வில்லை என்பதற்குச் சேனாவரையர் 'விளிவேற்றுமை எதிர்முகமாக்குதற் பொருட்டாதல் பெயரானே விளங்குதலிற் கூறாராயினர்' என்று விடையளித்துள்ளார்.

இளம்பூரணப்பதிப்பில் 'தன்மைய என்றான், விளி பெயரொடு கொள்ளும் என்பதூஉம், கொள்ளுங்கால் ஏற்கும் என்பதூஉம், பெயரொடுகொள்ளும் என்பதூஉம் சொல்லப்பட்டதாம்' என்ற சொற்றொடர் உள்ளது. இச்சொற்றொடரில் இறுதியிலுள்ள 'பெயரொடு கொள்ளும் என்பதூஉம்' என்பது இல்லாமலிருப்பின் ஒருவாறு பொருள் பொருந்தும்.

அவைதாம்
120-வது சூத்திரம். இஉ ஐஓ வென்னு மிறுதி
யப்பா னன்கே யுயர்திணை மருங்கின்
மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

'முறைப்பெயர்க் கிளவி யேயொடு வருமே' (தொல். சொல். 136) என்னுஞ் சூத்திரவுரையில் விரவுப்பெயரை உயர்திணைப்பெயரொடு மாட்டேறுகக்கொண்ட உரையாசிரியரைச் சேனாவரையர் இச்சூத்திரவுரையில் 'விரவுப்பெயரை உயர்திணைப்பெயரோடு மாட்டெறிபவாகலின், மாட்டேற்றான் முறைப்பெயர் ஆகாரமும் ஏகாரமும் பெற்று விளியேற்றலெய்தாமையின் ஈண்டுக் கூறினாரென்றாரால் உரையாசிரியரெனின்........, உரையாசிரியர்க்கு அது கருத்தன் றெனக' என்ற சொற்றொடரால் மறுத்துள்ளனர். இவ்வாறு சேனாவரையர் கூறியிருக்க, அவர்மதத்தைக்

காரணங் காட்டி மறுக்காமல் நச்சினார்க்கினியர் 'மூறைப்பெயர் மருங்கி ணையெ னிறுதி, யாவொடு வருதற் குரியவு முளவே' (தொல். சொல். 126) என்னுஞ் சூத்திரவுரையில் 'இவை விரவுப்பெயரேனும் ஈண்டு உயர் திணைப்பெயரிடை வைத்தார், மேல் விரவுப்பெயரை இவற்றோடு மாட் டெறிதலின்' என்று கூறி உரையாசிரியர்மதத்தையே கைப்பற்றியது எவ்வாறு பொருந்துமென்பது ஆராயத்தக்கது.

சேனாவரையர் 'அஃறிணைப்பெயர் ஆகுபெயராய் உயர்திணைக்கண் வந்துழியும்' என்றார். நச்சினார்க்கினியர் ஆகுபெயராய் என்பதற்குப் பிரதியாக அன்மொழியாய் என்று கூறியுள்ளார்; அவர்மதத்தில் அன் மொழி ஆகுபெயான்மையின்.

பாடபேதம்:— தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப்பதிப் பில் 'அஃறிணைப்பெயர் ஆகுபெயராயும் உயர்திணைக்கண் வந்துழியும்' என்றுளது; சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் ஆகுபெயராயும் என்ப தற்குப் பிரதியாக ஆகுபெயராய் என்றுளது. பின்னர்க்கூறியபாடமே பொருத்தமாயுளது.

125-வது சூத்திரம். அளபெடை மீகூஉ மிகர விறுபெய ரியற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப.

இச்சூத்திரத்தின் பொருள்:–

உரையாசிரியர்:—அளபெடை இகரம் ஈறாயின் இயல்பாயே விளி யேற்கும். எ - று. இனிச் 'செயற்கைய' என்பதனால், இரண்டு மூன்று மாத்திரைபெற எழுதுவாரும், ஐந்துமாத்திரைபெற எழுதுவாரும் என இருதிறத்தார் ஆசிரியர் என உணர்க.

சேனாவரையரும், நச்சினார்க்கினியரும்:—அளபெடை தன்னியல்பு மாத்திரையின்மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரைபெற்றுநிற்கும் இகர வீற்றுப்பெயர் இ ஈ யாகாது இயல்பாய் விளியேற்குஞ் செயற்கையை யுடையவாம். எ - று.

உரையாசிரியர்மதப்படி 'அளபெடை மிகூஉம்' என்பதற்கு விளி யின்றி அளபெடையைக்கொள்ளும் என்பது பொருள். அவ்வாறு கொள்ளின் இயற்கையவாகும் என்பதன்பொருள் மிகப் பொருந்தும். அவ்வாறன்றிச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் இருவருங் கூறும் பொருளில் இரண்டு குற்றங்கள் உள்ளன:–(1) இயல்பிலேயே அள பெடைகொண்ட 'தோழீஇ' முதலிய இகரவீற்றுச்சொற்கள் எவ்வாறு விளிபெறும் என்பது கூறப்படவில்லை. (2) அளபெடை மிகூஉ மிகர விறுபெயர் என்பதற்கு விளியில் அளபெடை தன்னியல்புமாத்திரை

யின்மிக்கு நான்கும் ஐந்தும் மாத்திரைபெற்றுநிற்கும் இகரவீற்றுப் பெயர் என்று பொருள்கொண்டு அதனை உத்தேசியமாகக்கொண்டால் அதைப்பற்றி முன்னர் விதித்திருத்தல்வேண்டும்; அவ்வாறு காணப் படவில்லை. இக்குற்றத்தை மனத்தில்வைத்துக்கொண்டுதான் சேனாவரையர் 'அளபெடைமிக் கியற்கையவாகுஞ்செயற்கைய வென்றது, 'மிகூஉமிகரவிறுபெய'ரென அநுவதித்தாரேனும், மாத்திரைமிக்கியல்பாமென்பது அதனாற் பெறப்படும்' என்று கூறியுள்ளார். சூத்திரப் போக்கை நோக்கின் உரையாசிரியர் முன்னர்க் கூறுமாறு அளபெடைகொண்ட இகரவிறுபெயரே விளியில் இயல்பாய் இருக்கும் என்பதே பொருத்தமானது.*

129-வது சூத்திரம். ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'ஏனைப்புள்ளி சிறுபான்மை விளியேற்றலுங் கொள்க' என்பதற்குக் கொடுத்துள்ள உதாரணத்துள் 'விளங்குமணிக்கொடும்பூணாய்' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளதை 'விளங்குமணிக்கொடும்பூணஅய்' என்று திருத்திப்படித்துக்கொள்க.

143-வது சூத்திரம். நும்மின் றிரிபெயர் வினாவின் பெயரென்
றம்முறை யிரண்டு மவற்றியல் பியலும்.

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர் 'எழுத்தோத்தினுள் நும்மென நிறுத்தித் திரித்தாராகலான் என்று கூறியுள்ளனர். அங்கு நும்மென்பது நீயிரினது திரிபென்றுவது, நீயிர் நும்மென்பதன் திரிபென்றுவது கூறியதாகத் தெரியவில்லை.

153-வது சூத்திரம். அம்ம வென்னு மசைச்சொ னீட்ட
மம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெளியு மோரே.

இச்சூத்திரவுரையில் நச்சினார்க்கினியப்பதிப்பில் 'அம்மவென்று கூறப்படும் முறைப்பொருட்கிளவியினது' என்றுளது. கூறப்படும் முறைப்பொருட்கிளவி என்பதற்குப் பிரதியாகக் கூறப்படு முறைப் பொருட்கிளவி என்றிருக்கலாம்.

விளிமரபு முற்றிற்று.

---

* இங்கு நேமிநாதம் சொல்லதிகாரம் 25-வது செய்யுளும்,
இகரமீ காரமா மையாயா மேயா
மூகரவோ கார வுயிர்கள் - பகர்விளிக
ளெண்மை யிடத்து மளபெடைப் பேர்க்கண்ணு
முண்மை யியல்பா யுறும்.
அதன்கீழுள்ள 'தோழீஇ' என்னும் அளபெடைப் பெயரும் அளபெடுத்தபடியே இயல்பாய் விளியேற்றதெனக் கொள்க' என்ற உரையும் நோக்கத்தக்கன.

பெயரியல்.

156-வது சூத்திரம். **பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்
சொல்லி னாகு மென்மனார் புலவர்.**

இச்சூத்திரத்துக்கு மூவரும் ஒரேவிதமாகப் பொருள்கொண்டனர். அஃதாவது ஒருசொல்லால் தன்வடிவமாவது, மற்றோரு பொருளாவது குறிக்கப்படவேண்டும். நீயென்கிளவி, தஞ்சக்கிளவி என்னுமிடங்களில் 'என்' என்ற சொல் விரிந்தும், தொக்கும் நிற்றலாற் பொருளைக்காட்டாது அவ்வச் சொல்வடிவங்களே குறிக்கப்படுகின்றன.*

சேனாவரையத்தில் 'சொல்லென்னுஞ் சொல்லும் பெயரென்னும் பெயரும் அறியப்படுதற்கட் சொன்மைதெரிதலாம், வினைச்சொல்லும் வினைப்பெயரு மறியப்படுதற்கட் பொருண்மைதெரிதலாம்' என்ற வாக்கியம் உளது. அதற்குப் பொருள் பின்வருமாறு:— 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே' என்னுஞ் சூத்திரத்திற் சொல் என்பதனால் உணர்த்தப்படுபவை இராமன், தகப்பன், தாய் முதலிய பெயர்ச்சொற்களும்; செய்தான், வந்தான், போனார், நின்றது முதலிய வினைச்சொற்களும்; ஏ, மற்று முதலிய இடைச்சொற்களும்; சால, நனி முதலிய உரிச்சொற்களுமாம். இங்ஙனங் கொள்ளுமிடத்து இராமன் முதலியன போலவே சொல் என்பதும் அதனாற் குறிக்கப்பட்டதாகும். ஆகவே சொல்லைக் குறிக்கும்போது தன்னைக்குறித்தலாகையாற் சொன்மை குறித்ததாம். இராமன்முதலிய பிறவற்றைக்குறிக்கும்போது பொருண்மைகுறித்ததாம். இங்ஙனமே 'ஈறுபெயர்க்காகுமியற்கையவென்ப' என்னுஞ் சூத்திரத்துப் பெயர் என்பதற்குங் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

---

*வடமொழியில் 'இதி ஶப்³த³: பதா³ர்த²விபர்யாஸக்ருத்' என்ற நியாயம் உள்ளது. அதற்குப்பொருள்:—'இதி என்ற சொல் அதற்குமுன்வரும் சொல்லின்பொருளை மாற்றிவிடும்.' என்பதே. அதாவது ராம: (இராமன்) என்றால், அஃது அப்பெயர்கொண்ட ஒரு மனிதனைக்குறிக்கும். ராம: இதி என்றால் ராம: என்ற சொல் ரா, ம: என்ற ஈரெழுத்தாலான சொல்லின் வடிவத்தையே குறிக்கும்.

ஸ்ரீ:

குருபரம்பரை.

எம்பெருமானார்வைபவம்.

[௩௫௨-ம் பக்கத்தொடர்ச்சி.]

ஆங்கவைகிடப்பப்பூதூரவதரித்தல்லறீர்த்தான்
நீங்கருமதிளரங்கநீணகர்நின்றுபின்னும்
தேங்கமழ்மாலைமார்பன்றிருக்கோட்டிநம்பியன்பின்
ஓங்குசீரருளெய்தேனேலுயிரினாற்பயனேதென்ன. (௨௯௯)

விற்றவக்கோட்டானென்னைவேண்டிலனெனினுநாயேன்
பற்றிலேனவனையன்றியென்றநற்பனுவறன்னைக்
கற்றவனிளையாழ்வானக்கருத்தினாற்பலகாற்றுன்ப
மற்றசீர்நம்பிசெம்பொனடிதொழுதரங்கஞ்சேர்வான். (௩௦௦)

ஆங்கதிலொருநாட்பூதூரண்ணலைநம்பிநோக்கி
யீங்குநீபலகாலென்பாலெய்தியதேதனாலென்றான்
ஓங்குசீர்ப்பூதூர்வள்ளலுரைக்குமுன்பார்த்தன்பெற்ற
பாங்குறுசுலோகநானும்பெறும்படிபரமாவென்ன. (௩௦௧)

கூறிடநம்பிகேட்டக்கோதிலான்றன்னைநோக்கி
மாறிலாய்திங்களொன்றுமற்றதுகேட்கவேண்டிற்
றேறியுபிராகாரத்தைச்சேர்ந்திடவேண்டுமென்றான்
ஆறியவெகுளியோனேயாங்கதுசெய்வேனென்ன. (௩௦௨)

வேறு.

செப்பினாரிளையாழ்வார்திருக்கோட்டிநம்பியவை
யிப்பொழுதைக்கல்லப்போயினமொருகால்வருதியென்றான்
அப்பொழுதேபணிந்தரங்கநகர்புக்காரிளையாழ்வார்
ஒப்புறுசீர்நம்பியுமங்கர்நாளிலோங்கரங்கன். (௩௦௩)

வேறு.

திருவிழாவணங்கச்சென்றுசெறிந்தன்னவ்வூர்தன்னின்
மருவியவர்க்கனைவரணங்கியாங்கமர்ந்தகாலைப்

பொருவறுமிளையாழ்வாருநம்பிபொற்பதத்திற்றாழ்ந்தார்
இருவருந்திருமான்முன்னேயெழில்பெறநின்றவேலை. (௩௦௪)

வேறு.

பெருமாணம்பிமுகநோக்கிப்பேதமில்லாயிவனுக்கிங்
கருமாமறையின்முடிவுரைக்குஞ்சரமச்சுலோகமருளென்றான்
கருமாமுகிலேயெனநம்பிகழறுமந்தக்கண்ணனெடுஞ்
செருமாச்சேரபாண்டியனுஞ்சிங்காசனமுந்தேர்த்தட்டும். (௩௦௫)

நோக்கிச்செய்யலாவதெவைநண்ணியோயென்றுரைப்பவிறை
வாக்கினாலப்பொருள்வழுத்தவல்லார்களைக்கொண்டப்பொருளை
யாக்குவேன்மற்றவனிடத்திலென்றானதுசெய்திடுகவென்ற
னுக்குப்புராளாதென்னினைவின்படியேனைவுபிறந்தன்றி. (௩௦௬)

என்றுகூறித்திருவிழாவெட்டுமிரண்டுங்கடந்ததற்பின்
வென்றித்திகிரித்திருமாலைவணங்கிநம்பிவிடைகொண்டு
சென்றுகோட்டியூர்நகரிற்செறிந்தான்பூதூரிளையாழ்வார்
அன்றுநம்பிபின்சென்றுதிரும்பியடுத்ததொருநாளில். (௩௦௭)

திருத்துங்கருணைத்திருக்கோட்டிநம்பிபதத்திற்சென்றிறைஞ்சக்
கருத்தினாலேயிளையாழ்வார்காதன்முற்றுமுறநோக்கி
யிருத்தியீண்டென்றருள்செய்யவிருந்தான்பின்னுமறுதிங்கள்
அருத்திமிக்கான்மாதுகரம்பண்ணியருந்தியதிலொருநாள். (௩௦௮)

மாதுகரத்துக்கெழுந்தருளிவரும்போதன்றிப்போம்போதும்
ஓதுங்கோதைதிருப்பாவையுரையோடுலாவித்திரிபவரும்
வேதம்வல்லதிருக்கோட்டிநம்பிமனையின்மெய்ஞ்ஞானப்
போதமுடையாராங்கொருநாட்புக்காருந்துமதகளிற்றில். (௩௦௯)

வேறு.

பந்தார்விரலீயுன்மைத்துனன்பேர்பாடச்
செந்தாமரைக்கையாற்சீரார்வளையொலிப்ப
வந்தாரணங்கேதிறவென்னவாசலின்முன்
னேர்தாறைதின்றானவ்வெல்லையினிநம்பிதரும். (௩௧௦)

வேறு.

அன்னமென்னடையாடேவகியென்னுமரும்பெயருடையவாரணங்கு
தன்னொருகரத்தாற்கந்துகமொன்றுதாங்கியோர்தாமரைக்கையால்
இன்னிசையெதிகட்கிறைவனார்திறவென்றிசைத்தசொலிறுமுனந்திறந்தான்
மின்னுமாமணிசேர்ந்திலங்கியகபாடம்விண்டுவின்றொண்டர்மெல்லியலை. (௩௧௧)

கண்டனர்பின்னைப்பிராட்டிமற்றிவளுங்கள்வனேன்பொருட்டினாலலர்ந்த
புண்டரீகச்சீர்த்திருவடிவருந்தப்போந்திவைதிறந்தனவென்னப்
பண்டரும்பனுவன்மறந்தனர்மண்ணிற்பதைப்பறவொடுங்கினர்விழுந்தார்
ஒண்டொடிகண்டுவெகுளியோடேகியுற்றதைப்பெற்றவற்குரைப்பாள், (ந. ௧௨)

ஐயரேவாசற்புறத்தினிலமர்ந்தாங்காசறுமூன்றுதண்டுடைய
கையனோர்மறையோன்றிறவெனக்கபாடந்திறந்துநாணிற்பதைக்கண்டு
மெய்யுறக்குழைந்துமோகமுற்றுடனேவிழுந்தனன்மண்மிசைவேடம்
பொய்யுறச்சமையுமிராவணன்போல்வார்பூதலத்துளர்கொலோபுகலின். (ந. ௧௩)

என்றிவைமகளாரியம்பிடநம்பியின்பமுற்றிருந்திளையாழ்வீ
ரொன்றுசீருந்துமதகளிறென்னவோதியபாடலோசந்தை
யின்றுநம்வாசற்றலையுறுமளவிலென்றனராமெனவெழுந்து
சென்றுமாமாதுகரம்பரிமாறித்தேசிகக்குன்றையும்வணங்கி. (ந. ௧௪)

திரும்பியன்றகத்திலேகினார்பின்னுமொருபகற்றேசிகனிடத்தில்
விரும்பியசிந்தையுடையவர்செறிந்தார்செறிதலும்விளங்குசீர்நம்பி
யிருந்துநாடோறும்பயிலிடம்விட்டாங்கெழிறிகழ்மாளிகைமீதிற்
பொருந்துமாமச்சிலேணியிட்டேறிப்பொருவறுஞ்சமாதியிலிருந்தான். (ந. ௧௫)

வேறு.

எண்ணருஞ்சீரிளையாழ்வாரெய்திநம்பிநாடோறு
நண்ணுமிடத்தெய்தியந்நற்றவனைக்காணாதே
யுண்ணிறைந்தகாதலனுந்தேவகியாருடன்கேட்பப்
பெண்ணணங்குமச்சின்மீதிருந்தனனெம்பிரானென்றாள். (ந. ௧௬)

ஆங்கதுகேட்டெதிராசரேணிமிசையடியிட்டங்
கோங்கியசீர்மச்சின்மிசையும்பர்தொழவினிதமர்ந்து
பாங்குறுசீர்ச்சமாதியினிற்படிந்தானையுறநோக்கிப்
பூங்கழல்கடொழுதிறைஞ்சியொருமருங்கிற்போயிருந்தான். (ந. ௧௭)

வேறு.

சென்றிருந்தவனைமுன்பிருந்தவனுந்திருக்கணைத்திறந்துறநோக்க
வொன்றியகருணையன்பினால்வணங்கியுத்தமர்தம்மிலுத்தமனே
யின்றுநீயிருந்ததியானமென்னென்றாரெதிகளுக்கிறைவர்மற்றவனும்
நன்றதுபகவானாளவந்தாரானான்மறைமுடிவினிலுறைவார். (ந. ௧௮)

வேறு.

செல்லார்பொழில்சூழரங்கத்திற்றிருக்காவிரியில்வடவாற்றிற்
பொல்லாப்புலன்களற்றவனேபொருந்திக்கவிழ்ந்துமூழ்க்குளித்திங்

கெல்லாப்பகையுமறவறுத்தான்கிடப்பானவன்றனெழின்முதுகு
வல்லான்கிடாரங்கவிழ்த்தியதொத்திருக்குஞ்சிவப்பின்வருநலத்தால். ()

அதனைத்தியானம்பண்ணியிருந்தல்லும்பகலும்நாள்கழித்தே
னெதனைப்பின்னுனினைப்பதுவுமென்றானம்பியெதிராசன்
மதனைக்கடிந்தான்மந்திரமேதென்றான்மற்றையவன்பெயரா
மிதனையமுனைத்துறைவரெனுமெழுத்தோராறையெனவிசைத்தான். ()

வேறு.

சீரமருமெதிராசனுளவந்தார்திறநோக்கி
நீரமருங்கண்ணினராய்நீளிரவும்பெரும்பகலும்
காரமரும்பொழில்சூழுங்கழனிமலிதிருக்கோட்டி
யூரமருநம்பியன்புக்குரித்தாவேனேயென்ன. (௩௨௧)

வேறு.

மன்னினார்பலநாளவ்வணமன்னிவருந்தினம்பலசெலநம்பி
யென்னுமாமறையோனருள்பெருமையினாலெரியுறுமெழுகெனக்கரைந்து
மின்னுமாமௌலிவிண்டுவின்றிருமுனொருபகல்வேதனையோடு
முன்னுமாய்ப்பின்னுமாயினானிருந்தானிருந்துழிமுதல்வனாருளால். ()

வேறு.

அந்நாளினம்பிபதத்தமர்வானோர்பாகவதன்
மன்னாநின்றான்பூதூர்வள்ளலவன்முகநோக்கிப்
பொன்னாழிக்கையாற்குப்பூந்துழாய்முடியாற்கிங்
கென்னாவியீடழித்தல்தகவலவென்றியம்பீரே. (௩௨௩)

வேறு.

என்றுரைத்தழுதுவிம்மியிருந்தனாதனைக்கண்டு
சென்றவனம்பிக்கர்த்திறமெலாமெடுத்துக்கூற
வன்றதற்கிரங்கிநம்பியார்த்தியிவ்வளவுண்டாய்த்தே
னன்றுநன்றென்னநின்றநவையிலான்முகத்தைநோக்கி. (௩௨௪)

செப்புவான்றிங்களொன்றுசீருறுமிளையாழ்வானைத்
தப்பறநிராகாரத்தைச்சார்ந்துபின்வரச்சொலென்ன
அப்பொழுதவனுநம்பியடிபணிந்தேகியந்த
வொப்பிலாவெதிராசற்கீதுரைத்தனனுகப்பினோடும். (௩௨௫)

நன்றதுசெய்வேனென்னநவையிலான்றிங்களாங்கே
யொன்றுசீருபவாசத்துக்கொருப்பட்டாங்கும்பர்போற்ற
மன்றல்சேர்கமலத்தாரான்வைகினானிராகாரத்திற்
சென்றதுதினமீரெட்டுந்தீர்த்தமுமருந்தலின்றி. (௩௨௬)

எட்டினோடெட்டுஞ்சென்றாங்கிசைந்தபினடுத்தநாளிற்
பட்டினிமோகத்தாலேபரமசாத்திகற்குச்சீவன்
விட்டதுபோலமூச்சுமெய்யுறவடங்கக்கண்டார்
கெட்டதுதிருமான்மார்க்கங்கெடுத்தனனம்பியென்ன. (௩௨௭)

வேறு.

ஆனாததிருத்தொண்டராழுதுநம்பிக்கவைகூறப்
போனானேலாளவந்தார்பாற்கேட்பன்போகிலனேல்
நானாகவுரைக்கின்றேனையயரிளையாழ்வான்
றானாகத்தொடுமிருந்தாற்றப்பாதீதிரண்டிலொன்று. (௩௨௮)

என்றானம்பிதேசிகனுமிலங்குநீதிக்குருமானா
மன்றாங்கவர்களிருவருமேயல்லாதிந்தவம்புவியில்
நின்றார்மேயோர்பலரெனினுநிகரிலாமற்றிவர்க்கிணையாய்க்
கன்றாற்கனிகொண்டவனைக்காணேன்காணேன்காணேனே. (௩௨௯)

வேறு.

ஆங்கதுகிடப்பப்பின்னுநம்பியையயன்பாற்போற்றி
யோங்குசீரெதிகனாதற்குணவொடுஞ்சிறங்கைதீர்த்தம்
பாங்குடனியமியென்னப்பணிந்தனர்பலகால்நம்பி
யேங்கிடவேண்டாதீர்த்தமருந்துதற்கிசைந்தோமென்றான். (௩௩௦)

விருப்பொடுந்தொண்டர்மீண்டுவிளங்குமாவிளையாழ்வார்க்குத்
திருப்படிக்கத்திற்றீர்த்தம்சீர்பெறக்கொணர்ந்துநம்பி
அருத்தியினுரைத்தானென்னவமுதுசெய்வித்தாரங்ஙன்
கருத்துறுதிங்கள்சென்றதொருவனைக்கண்டுநம்பி. (௩௩௧)

ஆங்கெதிபதிபாலேகியரியமுப்பகையைவென்று
தாங்கியதெண்டினோடும்பவித்திரத்தோடுஞ்சால
வோங்கியகுணத்தினானையொருவனாய்வரச்சொலென்றான்
பூங்கழலிறைஞ்சியந்தப்புலவனும்விரைவினேகி. (௩௩௨)

உடையவருகின்மன்னியுணர்வினாலுயர்ந்தோன்கூறும்
அடைவெலாமருளிச்செய்யவளவறுமகிழ்ச்சியோடுந்
தடையறமுதலியாண்டான்சாற்றியகூரத்தாழ்வான்
புடைசெலச்சென்றுநம்பிபூங்கழலிறைஞ்சிநின்றான். (௩௩௩)

சென்றடிவணங்கினானைத்தேசிகன்றிருந்தநோக்கி
நன்றிசேர்குணத்தாய்தெண்டுபவித்திரநற்சார்வாக.

வன்றிமற்றாருமின்றிவரச்சொனேமதுசெய்யாதே
யின்றிவரிருவரோடுமெய்துதலெதனுலென்ருன். (௫௩௪)

தேசிகனவணங்கூறச்சிபெரும்பூதூர்வள்ள
லாசிலாநிலையாய்தொண்டனப்படிதானேவந்தேன்
நீசனேன்பவித்திரந்தானிவனவனினைவிஞென்றிப்
பேசினற்றெண்டாமன்றேயென்றுதன்பின்புநின்ற. (௫௩௫)

கூரத்தாழ்வானைமுன்பேகுணத்தினுலுயர்ந்தோன்காட்டிச்
சீரொத்தமுதலியாண்டான்றன்னையுங்காட்டிச்செப்ப
வார்வத்தினம்பியிந்தப்பவித்திரமழகாந்தெண்டு
நேரொத்ததில்லையென்னநிகழ்த்திமேனிகழ்த்தலுற்ருன். (௫௩௬)

எம்பெருமானுர்தம்மோடியம்புமிவ்வுண்மைமைந்தா
வம்பவிழ்துளபத்தாரோன்மலர்மகட்குரைக்கமங்கை
யும்பரிற்சேனைநாதற்குரைத்திடவவருமந்நா
ளிம்பரிற்காரிமாறனிடத்தினில்வைப்பமாறன். (௫௩௭)

வேறு.

நாதமுனிக்கருள்செய்யநற்றவனுமற்றதனைப்
போதமிகுமுய்யக்கொண்டார்க்குரைப்பப்பூதலத்தின்
மாதவஞ்செய்மணக்காலநம்பிக்கந்தமாப்பொருளை
யோதினரன்றுய்யக்கொண்டாரென்னுமுத்தமனர். (௫௩௮)

மற்றதைமணக்காலநம்பியாளவந்தார்பால்வைப்பப்
பெற்றனனுளவந்தார்பிள்ளையாய்நானுமீதை
யுற்றதின்றளவுமைந்தாவோராசான்வழிகண்டாயே
கற்றசீர்மேலோய்நானுங்கழறுவனுனக்குமீதை. (௫௩௯)

நின்னுடைமரணாந்தத்தினிலையுடையொருவன்பாலே
மன்னவைத்திடுதலன்றிமற்றொருவர்க்குஞ்சொல்லேன்
என்னவென்சிரத்தைத்தொட்டின்றிடுகநீயாணையென்னத்
தன்னுயிர்க்கிரங்காவேதத்தலைவராமிளையாழ்வாரும். (௫௪0)

அப்படிசெய்வேனென்தாயென்றெழுந்தடியிற்றாழ்ந்து
செப்பருநம்பிசெய்யதிருவடியிரண்டுந்தீண்டித்
தப்பிலேனருளிச்செய்தபடியென்சாற்றநம்பி
யொப்பிலான்செவியிலந்தவுண்மையையுபதேசித்தான். (௫௪௧)

வேறு.

வேதமுடிவில்வீற்றிருந்துவிளங்குஞ்சரமச்சுலோகத்தைப்
பூதமைந்துந்தன்னிலையிற்பொறுத்தபுனிதனெனவிருந்தன்
றோதக்கேட்டாங்குடையவருமுள்ளத்தெழுந்தமெய்ஞ்ஞானப்
போதத்தாலேயிறைஞ்சியிதன்பொருளையருள்கபுனிதவென. (௩௪௨)

நின்றான்கண்கள்புனறதும்பநிகரிலாதவெதிராசன்
குன்றாநிலையான்றிருக்கோட்டிநம்பிகண்ணனெனக்கூறக்
கன்றால்விளவின்கனியெறிந்தகமலநயனக்கருமுகிலும்
பொன்றாப்போதக்குருமணியுநீயேயென்றப்புங்கவனை. (௩௪௩)

திருந்தவிறைஞ்சிமன்னுயிர்க்காய்ச்சீரார்பரமபதந்தன்னி
லிருந்தஞானச்சுகோததிவந்திவணமெளிதாயிருநிலத்திற்
பொருந்துநெறியையறியாதேபோதமிழந்துபொய்ப்பிறப்பில்
வருந்துமுயிர்களந்தோவென்றழுதானிரங்கிமதிமிக்கான். (௩௪௪)

வேறு.

அப்படியழூஉநின்றவன்பனைநம்பிநோக்கி
யொப்பிலாயினியுன்னாலேயுலகிடையுயிர்களெல்லாந்
தப்பறமேலைவீட்டைச்சாருமாநரகஞ்சாரா
வெப்பமார்கலியுந்தீரும்மேதினிக்கிடருமில்லை. (௩௪௫)

என்றுரைசெய்தமேலோனிணையடியிரண்டுந்தீண்டிச்
சென்றுதன்சிரத்திற்சேர்த்தித்திருமுகத்தமைத்துமார்பி
லன்றுறப்பதித்துமண்ணோடுழுந்தறவணங்கிநிற்ப
வொன்றியகருணைநம்பியேகெனவுடனேசென்ற. (௩௪௬)

கந்தாடைமுதலியாண்டான்கதமறுகூரத்தாழ்வான்
நந்தாதவிளக்கன்னார்களிடம்வலம்நண்ணமீண்டான்
மூன்றாதிவிளைத்ததுன்பான்மூளரியங்கண்ணனேகச்
சிந்தாமெய்ந்நிழற்போற்செல்லுஞ்சமித்திரைபெற்றசிங்கம். (௩௪௭)

சீரார்நம்பிபாற்கடலாய்த்திருமாறனாய்மந்தரமு
மேரார்பத்தியாய்த்தாம்புமெய்தற்கரியவயிச்சியமா
யாசாவன்பினுபதேசவமுதங்கடைந்துகொண்டெளிதின்
வாராநின்றானிளையாழ்வான்மலர்த்தாளுறும்பூசார்க்காக. (௩௪௮)

அறிவின்மிக்கதிருமகள்கோனமுதங்கொணர்ந்துவானவர்முன்
செறியவந்தவானவர்கள்திரளோடாடிக்களிப்பதுபோ
னெறிநின்றோங்குமெதிராசனிமலவுயிர்த்தவுபதேசங்
குறியிற்கொணரக்கண்டாடிக்களித்தார்குழைந்துபாகவதர். (௩௪௯)

அப்படியேயெதிராசனணையவவன்றாளிணையை
யெப்பொழுதுஞ்சிந்தனையுளுறவிருத்தியினிதமருஞ்
செப்பரியபாகவதரெதிர்கொண்டுசேவிப்பத்
தப்பறவங்கவரோடுந்தெற்காழ்வான்சன்னிதியில். (௩௯0)

சென்றமர்ந்துதொண்டர்கட்குத்திருக்கோட்டிநம்பியெனுங்
குன்றனையதிரடோளான்கலியாணகுணங்கடனை
யென்றுமகிழ்ந்தெப்பொழுதுமிரவுபகலெடுத்திசைத்து
மன்றல்கமழ்தார்மார்பன்சிலபகல்கள்வைகினான். (௩௯௧)

அந்தநாளிற்றெற்காழ்வாராகுமழகியசிங்கருக்கிங்
கிந்தநிலத்தோரிடர்நீங்கியீறிலின்பமெய்திடுவான்
வந்ததிருநாட்பலவதனில்வயங்குமொருநாண்மண்டபத்திற்
கந்தமிக்கதுழாய்முடியான்றிருவோலக்கங்கண்டருளி. (௩௯௨)

பாகவதப்பெருந்திரளோடிருந்தனனப்பாலதுகண்
டாகமுறவாநந்தச்சுகோததியையருந்தியெழு
மேகமருளெதிராசன்மேதினிமேல்ஞானபா
போகம்விளைவித்துலகையுய்விக்கும்பொருட்டாக. (௩௯௩)

வேறு.

தானறப்பெய்துமாயுந்தடமுகிலென்னநம்பி
தேனமர்கமலத்தாளைத்தீண்டியதோடத்தாலே
நானொருவனுமேயன்றோநசிப்பதித்திரள்களெல்லா
மானவான்பேரின்பத்தையருந்துமேயந்தோவென்றே. (௩௯௪)

பாரற்கவியின்சொற்றுணிவேபரமாநந்தப்பேரிடியாய்க்
கானிற்புரிமுத்திரைமின்னுய்க்கடிசேர்கிரிகளடியவராய்ச்
சிரனிற்பதிமெய்க்காலூன்றித்தேசமெங்குஞ்சிறந்தோங்கச்
சரமச்சுலோகமெனுமழையைப்பொழிந்தானெதிகடனிநாதன். (௩௯௫)

வேறு.

அப்படிபரமார்த்தத்தையனைவருமறியும்வண்ணஞ்
செப்பினரிளையாழ்வாரத்திறத்தினைநம்பிகேட்டு
வெப்பமுற்றவரையிங்கேவிரைவினிற்கொணர்மினென்ன
வொப்பிலாவிருவர்சென்றாங்குடையவரடியிற்றாழ்ந்தே. (௩௯௬)

அருளிப்பாடும்மைநம்பியமாருந்துதிசெய்தேத்துந்
தெருளுற்றநிலையாயென்றுசெப்பினாதனைக்கேட்டப்
பொருளைத்தம்பெறநாயிங்கேபுகன்றதன்பொருட்டிதென்ன
மருளற்றநிலையான்கூடமற்றவரோடுஞ்சென்றே. (௩௯௭)

சீரியநம்பிசெய்யதிருவடியிறைஞ்சிநிற்பப்
பாரினிலொருவர்க்கிந்தவுண்மையைப்பகரேனென்ன
நீரெனையாணையிட்டுநீங்கினீரதனைப்பாரா
தாரவர்க்கெல்லாங்கூறியுமக்குமென்பெற்றீரென்றார். (௩௫௮)

என்றவரருளிச்செய்யவெம்பிரானிளையாழ்வாரும்
பொன்றவில்நரகம்பெற்றேன்புனிதனேயென்னநம்பி
யென்றதையறிந்துமெத்தாவிதுசெய்தீரென்றுகூற
மன்றல்சேர்மாலைமார்பன்மற்றவரோடுஞ்சொல்வான். (௩௫௯)

என்னுயிரொன்றுமன்றேவிருநரகடையுங்கேட்ட
மன்னுயிரனைத்துமுய்யுமந்திரத்துறுதியாலே
நன்னெறியுடையாயென்றேநானதுசெய்தேனன்றிப்
பின்னொருநினைவுமில்லைப்பேதையேனினைந்ததென்றான். (௩௬0)

அன்றவையறியக்கேட்டேயளவறுமகிழ்ச்சிகூர்ந்து
சென்றெடுத்துடலுந்தூயசிந்தையுமழுந்தப்புல்லி
யொன்றியவன்பினாலேயுச்சியைவளைத்துமோந்து
நன்றுநன்றன்பவுன்னைநானிலத்தெவர்களொப்பார். (௩௬௧)

தன்னுயிர்தன்னைக்கொண்டுதான்பிழைத்திடுவதன்றி
மன்னுயிர்க்கிரங்கித்தன்னைமைந்தனேமாய்க்கப்புக்கார்
இந்நிலத்தில்லையில்லையேழுலகத்துமில்லைப்
பன்னருங்குணத்தாய்செங்கட்பரஞ்சுடராகுமெம்மான். (௩௬௨)

வேறு.

இடையிலோர்கோட்பாடின்றியாவருமெவையுந்தன்பாற்
றடையறவிருத்திக்காக்குந்தனிப்பெருங்கடவுளேனும்
விடைவலான்விரிஞ்சனாதிமேவுபல்லுயிர்கட்கெல்லாம்
உடையவனீயேயாமென்றுரைத்துமீண்டுரைப்பானம்பி. (௩௬௩)

வேறு.

எம்பெருமானாருடையதெரிசனமென்றின்றுமுதல்
உம்பருமாமுனிவர்களுமுலகேழுமொழிகடல்சூழ்
இம்பருமாதவத்தினருமிசைத்திடுகவெனவிசைத்துத்
தம்பெருமாக்கருணையெனுந்தடம்புனலாலெதிராசன். (௩௬௪)

தன்னுயிர்குளிரவாட்டித்தனயனைமுத்தமொடுநோக்கி
முன்னுனக்குபதேசித்தமந்திரமுதன்மையாலே

யுன்னருமகிழ்ச்சிதன்னையுடையனாயிருந்தாய்நானும்
பன்னரும்பொருளைமேவிட்டொருபடிகர்ந்ததன்றி. (௩௬௫)

பதந்தொறுமறுத்துச்சொல்லின்பயனுனக்குரைத்தேனில்லைத்
திதம்பெறச்சொற்கடோறுஞ்செப்பெனவலியநீயே
யிதம்பெறக்கேட்டபின்னுமியம்புதல்கடனென்றெண்ணிக்
கதங்கெடுசிந்தையாய்நீகழறெனவென்னைமுந்தி. (௩௬௬)

கேட்டிலைமுற்றுங்கேட்டகிளரொளியுறுதியாலே
வாட்டமின்ஞானானந்தமதியரின்மன்னாநின்றாய்
ஈட்டுபஃறவத்தாய்கேளாதிருந்தமைதனையுநெஞ்சிற்
கோட்டியவுணர்வால்நீயேகுறையறவுணர்ந்தவாறும். (௩௬௭)

செப்புதிதெளியவென்னத்திருக்கோட்டிநம்பிகூற
ஒப்பிலாய்கேட்டியென்னவுடையவரிறைஞ்சிச்சொல்வார்
தப்பறநீயன்றென்பாற்றந்தமெய்ம்மந்திரந்தான்
எப்பொழுதினுநின்றென்னையெலையறுமகிழ்வில்வைக்கும். (௩௬௮)

ஆங்கதற்கொன்றாய்நீயேயருளியபடியைவிட்டுத்
தாங்குமோரத்தமின்னுமுண்டுகொல்சாற்றென்றேனேற்
பாங்கறும்விச்சுவாதியாயினேன்பதங்கடோறும்
தேங்கமழ்மாலைமார்பசெப்பெனக்கேளானாகில். (௩௬௯)

கூறியவுண்மைநெஞ்சிற்கொண்டவனல்லேனென்றும்
வேறுறுமிரண்டினாலும்வேதனையுடையனாயுந்
தேறின்றதனைக்கேட்கும்விரகறியாதுஞ்சிந்தை
மாறறக்கேட்கும்வேட்கைமன்னவும்வைகினேனான். (௩௭௦)

என்றிவைவணங்கிநின்றாங்கெதிகடந்தலைவன்கூறச்
சென்றவன்றன்னைப்பின்னுந்திருக்கோட்டிநம்பிபுல்லி
நன்றிசேர்குணத்தினானேநவையறநின்னையொத்தா
ரின்றார்குருமாவிந்தநீணிலத்தொருவரில்லை. (௩௭௧)

மருவருமித்தமொன்றுவழங்குவேனின்றுபோய்நீ
யொருவனாய்வருதியென்றாநம்பியுமுரைப்பநின்ற
பொருவிலாநம்பிசெய்யபூங்கழலிறைஞ்சிமீண்டு
திருவரங்கத்தின்மன்னிச்சிலபகலிருந்துவாழ்ந்தான். (௩௭௨)

ஆசறவிவணம்வாழ்ந்தானங்கிலொருநாட்பின்னுந்
தேசிகர்திலகமாயதிருக்கோட்டிநம்பிமுன்னம்
பேசியபரமார்த்தத்தைப்பெறும்படியொருவனாகி
நீசனேனுவிகாத்தநின்மலனெழுந்துசென்றான். (௩௭௩)

வேறு.

சென்றவனுந்திருக்கோட்டியூரென்னுஞ்செழுநகர்வாழ்
மன்றல்கமழ்தார்மார்பன்மலரடியையுறவணங்கி
நின்றனனத்திறநோக்கித்தேசிகனுநிமலனந்தக்
குன்றனையதிரடோளான்குணநோக்கிமனமகிழ்ந்தே. (௩௭௪)

வந்தவர்யாவர்மைந்தாமற்றுநின்னோடுமென்ன
வந்தமில்குணத்தான்கேட்பவாசிலாப்பூதூரானு
மெந்தைநாளொருவனன்றியெய்தினரில்லையென்றான்
முந்தைநாண்மறைத்தவர்த்தமுழுதையும்முதல்வன்கூறி. (௩௭௫)

ஈங்கிதையொருவருக்குமியம்பிடாதிருத்தியென்றான்
றீங்கறுமாழ்வானுக்குத்தேசிகாசெப்பவேண்டும்
ஆங்கவற்கன்றியார்க்குமறைகிலேனென்றான்மைந்தன்
றேங்கமழ்மார்பனாயதிருக்கோட்டிநம்பிசெப்பும். (௩௭௬)

வேறு.

இப்பொருளுக்கதிகாரமாழ்வானுக்குண்டெனினு
மொப்பரியாயோராண்டுன்னுளமகிழ்ந்தகயிங்கரியந்
தப்பறச்செய்திட்டதற்பின்சாற்றிடுகபோதியெனச்
செப்பமிகுந்திருக்கோட்டிநம்பியருள்செய்தருள. (௩௭௭)

வேறு.

மண்ணுறப்பணிந்துமற்றவன்செய்யமலரடிமுடிமிசைதரித்து
விண்ணுறப்பதிந்தவமரருமமரர்வேந்தனுமலர்மழைபொழியக்
கண்ணுறப்பொழியுமானந்தவாரிகளைகடலணுவெனப்பெருக
வுண்ணிறைமகிழ்ச்சியுலகெலாமுருக்கவொருவராய்த்திருவரங்கத்தில். (௩௭௮)

அன்றவரெய்துமுனமவர்போனவாசறுதென்றிசைநோக்கி
நின்றவாழ்வானுமுதலியாண்டானுநிகரிலாமுதலிகள்பலரு
மென்றினிவருமென்றிரங்கினர்கண்டாரின்னருள்சுரந்தவான்கண்ட
கன்றெனத்துள்ளிச்சென்றெதிர்பணிந்தக்கருணைவாரிதியொடுங்கலந்தார். ()

சீரியவிராமன்றேவர்கள்பொருட்டாற்றென்றிசைக்கேகிமற்றவர்கள்
காரியங்கண்டுதிரும்புமுன்கலங்கிக்கண்டபின்களித்தெழுந்தாடுந்
தாரியன்மார்பன்பரதனையொத்தார்தனித்தனிமுதலிகள்தாங்க
வேரியல்சிவிகைமீதினிலெழுந்தாங்கெழிலரங்கத்தினிற்புகுந்தார். (௩௮௦)

தென்னரங்கத்திற்புகுந்தபின்மகிழ்ந்தசிந்தையன்சீபெரும்பூதூ
றென்னுநன்னகரிற்றிருவவதரித்தானிலங்குமாழ்வான்முகநோக்கி
யுன்னரும்பொருள்கணம்பியும்பகர்ந்ததுரைக்கலையொருவற்குமென்றான்
அன்னவன்றன்னோடிதனையாழ்வானுக்கறைந்திடவேண்டுமென்றறைந்தேன்.()

அப்படியாகில்வருடமொன்றுன்பாலன்புறுகயிங்கரியங்கள்
தப்பறக்கொண்டுபின்னிவைமொழிதியென்றனன்றலைவனென்றிசைத்தான்
ஒப்பறுநிலைதேர்கூரத்தாழ்வானுமுரைத்தவவ்வுறுதியைக்கேட்டே
யெப்பொழுதிறக்குமவதியென்றறியேனிவ்வுயிரிவ்வுடம்போடும். (௩௮௨)

மாசிலாநிலையாய்வருடமொன்றிருந்துமற்றதுநின்னிடைப்பெற்றே
நீசனேனுய்வேனென்பதற்கவதியுண்டுகொனினைவினானோக்கிற்
பேசிலாரென்போற்பாவிகளென்னப்பெருந்துயருற்றுறவருந்தி
யாசிலாக்குருமாநிலையினைமறைகளறைந்தநற்சாத்திரமனைத்தும். (௩௮௩)

திருந்துறநோக்கியாங்கவைதம்முட்டேசிகன்றிருவுளமகிழ
வருந்தியோராண்டுகயிங்கரியங்கள்வழுவறச்செய்ததற்கொக்கும்
பொருந்துமோர்மாதம்பட்டினிவிட்டப்பொருவிலான்றிருமனைவாயி
லிருந்திடப்பெறுகிலென்றிருந்தமைகண்டிணையிலானப்படியிருந்தான், (௩௮௪)

வேறு.

ஒப்பிலான்றிங்களொன்றாங்குபவாசமாயிருப்பத்
தப்பறவங்கதைநோக்கிச்சாற்றருஞ்சீரெதிராசன்
செப்பினானம்பிதன்பாற்செப்பியசீர்ப்பொருண்முழுதும்
அப்பொழுதேமுதலியாண்டானுமதுபெறவெண்ணி. (௩௮௫)

உடையவர்திருமுனெய்தியொப்பிலாவாழ்வான்பெற்ற
அடைவுறுபொருளைநீநின்னாசிலாக்கருணையாலே
கடையனேன்றானுமெய்தும்வண்ணநீகழறவேண்டுந்
தடையறவின்றேயென்றத்தத்துவன்சரணந்தாழ்ந்தான். (௩௮௬)

ஆங்கவன்றன்னைநோக்கியாசிலாவெதிகணாதன்
ஓங்குசீர்நம்பியாழ்வானொருவனுக்குரைத்தியன்றிப்
பாங்குறுமிதனையார்க்கும்பகரலையென்றான்பல்காற்
றாங்குநற்குணத்தின்மிக்காய்நீயுமத்தலைவன்றன்பால். (௩௮௭)

சென்றவனருளின்வைகித்திருந்தநின்றதனைக்கேட்டு
நன்றிசேர்குணத்தாய்பின்னைநம்மிடைவருதியென்ன
வொன்றியகருணைமிக்கவுடையவரருளிச்செய்ய
வன்றுறமுதலியாண்டானாங்கவரடியிற்றாழ்ந்தே. (௩௮௮)

உடையவர்தம்மைமுக்கால்வலஞ்செய்தெனுயிர்க்குநாதா
விடையெனப்பெயர்ந்துதென்பால்விரைவினில்நடந்துஞானத்
தடைவுறுநம்பிமன்னுமணிதிருக்கோட்டியூரிற்
றடையறச்சென்றுநம்பிதாமரைச்சரணந்தாழ்ந்தான். (௩அ௯)

அந்தமில்கருணைநம்பியாங்கவன்றன்னைநோக்கி
வந்ததென்முதலியாண்டானென்றனன்மற்றமைந்தன்
எந்தைநின்னிடத்திலுண்மையிருவினையெனும்பெற்றென்
பந்தமாம்பிறவிவேரைப்பறிப்பதன்பொருட்டாலென்றான். (௩௯0)

என்றிவைமுதலியாண்டானியம்பிடநம்பிகேட்டாங்
கன்றதற்காமாகாதென்றறைந்திலனருகுநின்ற
வொன்றியசிந்தைதம்மைந்தனுத்தமக்குரவனூர்க்கோர்
நன்றிசேர்தொழில்கள்பண்ணிநாமிவண்வைகல்வேண்டும். (௩௯௧)

வேறு.

என்னநினைந்தன்றுமுதலறுதிங்களெழிற்குரவன்
மன்னுதிருமடைப்பளிக்குமஞ்சனமுமுவந்தளித்துத்
தன்னுடலைமிகவாட்டிச்சதாசேவையொடுங்குரவன்
பின்னுமுனும்பகலிரவும்பிரியாதேயுடன்வாழ்ந்தான். (௩௯௨)

அப்படியேயறுதிங்களற்றதற்பினுங்கொருநாட்
டப்பறுஞ்சீர்மைந்தனந்தத்தவமிக்கான்முகநோக்கி
யொப்பரியாயடியேனுக்குய்யுநெறியருளென்றான்
செப்பவிருநம்பியந்தச்சீரியோன்முகநோக்கி. (௩௯௩)

வேறு.

ஆங்கொருசுலோகந்தன்னையருளியிப்பாட்டிலுள்ள
பாங்குறுபொருள்கடன்னைமைந்தனேபகரக்கேட்டி
யோங்கியகல்வியத்தமொழுங்குறுகுலமிம்மூன்றுந்
தாங்கிடுங்கெருவையிந்தத்தத்துக்குப்பிழைத்தாயாகில். (௩௯௪)

வருதியிப்போதுபோதிமைந்தவென்றறைந்தானம்பி
சுருதிசேர்முதலியாண்டான்றுணுக்கமுற்றதனைநோக்கிக்
கருதியமூன்றுமூன்றுகாலனுமாவிக்கென்னப்
பருதியேயனையான்பாதம்பணிந்துமீண்டரங்கம்புக்கான். (௩௯௫)

புக்கவர்நம்பிதன்பாற்புகுதுமுன்குலத்தினாலும்
மிக்கசீர்ஞானத்தாலுமேம்படுதனத்தினாலும்
தக்கசீரொதிகணுதன்றொண்டர்க்குத்தலைவராகி
யொக்கநிற்பவர்களின்றியொருவராயிருந்துவாழ்ந்தார். (௩௯௬)

வேறு.

அத்திறமூன்றுமறுத்தறவொடுங்கியாசறுமுதலியாண்டானும்
மெய்த்திறமுடையவுடையவர்பதத்தில்விரைமலர்சொரிந்துறவணங்கிப்
பொய்த்திறங்கடிந்தமுதலிகடமையும்பூபிசைப்பணிந்தவணின்றா
ணித்திறங்காண்மினெனவெதிராசனிருந்தவம்முதலிகட்கிசைப்பான். ( )

வேறு.

திருக்கோட்டிவளர்க்குங்கண்ணன்றெரிசனத்தடைந்தோருற்ற
திருக்கோட்டியாவிகாக்குஞ்சீரியநெறியாலன்றே
திருக்கோட்டியூரின்மன்னுஞ்செழுந்தவன்றனக்குத்தொண்டர்
திருக்கோட்டிநம்பியென்னுநாமமுஞ்சேர்ந்ததன்றே. (௩௯௮)

என்றிவையருளிச்செய்தாங்கிறைஞ்சியமுதலியாண்டான்
றன்றிருமுகத்தைநோக்கிச்சாற்றுவான்மைந்தாநம்பி
யன்றுநீவிரும்பிக்கேட்டதருள்புரிந்தனனோவென்றான்
னின்றசீர்மறையோனந்தநிமலனோடுரைப்பதானான். (௩௯௯)

வேறு.

ஆன்றொழுமெய்யறிவுடையாயறுதிங்கட்பின்சென்று
தோன்றியசீர்நம்பியுடன்றொண்டனேற்கிரங்கென்றேன்
மூன்றுளதுதத்தவற்றுண்முடியாதுதப்பினையே
லூன்றியதோர்மதிமிக்காய்பின்வருதியெனவுரைத்தான். (௪௦௦)

வேறு.

அந்நெறிமூன்றுமகல்வதெக்காலமடியனேன்றனக்கெனவழுதா
னன்னெறியுடையமைந்தனுங்கதுகண்டுடையவர்நவையிலாய்கடிந்தாய்
இன்னமுமுளதோவுனக்கவையில்லையினிச்செலினம்பியதியம்பும்
மன்னுசீரன்பவேகெனவிடுப்பமாசறுமுதலியாண்டானும். (௪௦௧)

சென்றனன்மீண்டுநம்பியைவணங்கித்தேவகிப்பிராட்டிமுன்னிலையா
யன்றதுபெற்றுமீண்டனனெதிகட்கதிபனுமித்திறங்கேட்டாங்
கின்றெனக்கன்றேபவித்திரத்துடனேயிலங்குதண்டெய்திடப்பெற்றேன்
ஒன்றியதவத்தாயெனவுளமகிழ்ந்தாங்கோங்கரங்கத்தினிலுறைய. (௪௦௨)

[தொடரும்].

உதவிப்பத்திராதிபர்.

உ

இரண்டாம் இராஜராஜன்.

பிற்காலச் சோழர்களிலே விஜயாலயன்முதல் அதிராஜேந்திரன் இறுதியாகச் சோழ அரசர் பலர் ஆட்சிபுரிந்தபின் இரண்டரம் இராஜேந்திரனது பெண்வயிற்றுப் பேரனும் கீழைச்சளுக்கியான இராஜராஜன் மகனுமான இராஜேந்திரன் என்னும் பெயருடைய குலோத்துங்கன் சோழசிங்காதனம் ஏறினான். இவனுக்குப்பின் குலோத்துங்கன் என்ற பெபரையுடைய சோழ அரசர் பலர் தோன்றினமையின் இவனே முதற் குலோத்துங்கன் என்பர். இவன் கி. பி. 1070 முதல் 1118-ம் ஆண்டு வரை அரசாண்டான். இவன்மேல் 'குலோத்துங்கசோழன்சரிதை' என ஒருநூல் கவிகுமுதசந்திரபண்டிதன் எனப் பட்டம்பெற்ற திருநாராயண பட்டனால் இயற்றப்பட்டு, அரசன் கட்டளைப்படி திரிபுவன மகாதேவி சதுர்வேதிமங்கலப் பெருங்கிறி மஹாஸபையோர் முன் அரங்கேற்றப் பட்டது.

இவனுக்குப்பின் இவன்மக்கள் எழுவருள் இரண்டாவதுமகனாகிய விக்கிரமன் 1118-ல் அரசுகட்டிலேறினான். இவன் பதினேழு வருடம் அரசாண்டானென்று சரித்திரக்காரர் கூறுவர்.

இவ்விக்கிரமசோழன் கி. பி. 1135ல் விண்ணுடுற்றபின் இவன் மகனான குலோத்துங்கசோழன் அரியணையேறினான். இவனே, 'ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச் சூடுங் குலோத்துங்கசோழனென்றே யெனைச் சொல்லுவரே' எனப் பாடியவன். கூத்தரால் உலாவும் பிள்ளைத்தமிழ் மாலையும் பெற்றவன். குருபரம்பரை கிருமிகண்டசோழனென்று கூறுவது இவனையே யென்பர். இதற்குக் காரணம் இவன் வைணவசமய விரோதியாய்நின்று, திருமாலை நிந்தித்து, வைணவாசாரியரிற் றலைசிறந்தவரான இராமநுஜனைத் துன்புறுத்தியதேயென்று குருபரம்புரை என்ற நூலால் தெரிகிறது.

"தில்லைத்திருமன்றின்முன்றிற்சிறுதெய்வத்
தொல்லைக்குறும்புதொருக்தெடுத்த"

(குலோத்துங்கசோழனுலா).

"*சிற்றம்பலமுந்திருப்பெரும்போம்பலமும்
மற்றும்பலபலமண்டபமும்—சுற்றிய
மாளிகையும்பீடிகையும்மாடமுங்கோபுரமும்
சூளிகையுமத்தெருவுந்தோரணமும்—ஆளுடையான்
கோயிற்றிருக்காமக்கோட்டமுமக்கோயில்
வாயிற்றிருச்சுற்றுமாளிகையும்—தூயசெம்
பொன்னிற்குயிற்றிப்புறம்பிற்குறும்பறுத்து
மூன்னிற்கடல்களுண்மூழ்குவித்த—சென்னி"

(இராஜராஜதேவருலா).

"முன்றிற்கிடந்தகருங்கடல்போய்முன்னைக்கடல்புகப்பின்னைத்தில்லை
மன்றுக்கிடங்கண்டகொண்டல்பெற்றமரகதமேருவைவாழ்த்தினவே"

(தக்கயாகப்பரணி).

என்பவற்றால் இவன் வைணவமதம் பரவவொட்டாதபடிதடுத்து, சைவம் தழைக்கச்செய்து, சிவாலயங்களுக்கும் வேண்டுவன உதவிவந்தான் என்பது வெளியாகிறது. கல்வெட்டுக்களில் இவனது பத்தாவது ஆண்டுவரையுள்ளனவே காணப்படுவதால் இவன் பத்துவருடங்களே ஆண்டனனென்பர். ஆனால் இவன் மகனான இரண்டாம் இராஜராஜன் கி. பி 1146-ல் அரசுகட்டிலேறினனென்று பஞ்சாங்கக் குறிப்புகளால் கணித்திருக்கிறபடியால் இவ்வரசன் பதின்மூன்றாண்டு ஆட்சி புரிந்தான் என்று கொள்வதே தகுதி. இவன்விஷயமாக, 'பூமன்னு பாவை காமுற்றுமுயங்க' என்றும், 'பூமேவிவளர்திருப் பொன்மார்பு புணர' என்றும் தொடங்கும் இரண்டு மெய்க்கீர்த்திகள் உண்டு. திருவாரூர்க் கல்வெட்டொன்றில் இவன் தன்னை அநபாயன் என்று கூறிக்கொள்ளுகிறான். இந்த அநபாயன் என்னும் பெயர் பிற்காலச் சோழர் பலரும் கொண்டதொரு பொதுப்பெயர். இவன் சில ஊர்களை அநபாய சோழநல்லூர் என்று தன் பெயரிட்டுப் பிறருக்குத் தானஞ்செய்திருப்பதாலும், சென்னி அநபாயன் குலோத்துங்கன் எனப் பெரியபுராணத்துப் பயின்றுவருதலாலும், இவனே சேக்கிழாரடிகளைப் பெரியபுராணம் பாடவேண்டியவன் என்பர் சிலர். அது பொருத்தமற்ற ஒரு செய்தி என்பதற்குப் பலகாரணங்கள் உள.

*குலோத்துங்கன் II சிற்றம்பலத்தே செய்த திருப்பணிகளிற் சில திருப்புறம்பயக் கல்வெட்டுக்களாலும் உறுதிபெறுகின்றன.

இவன்மகனே இரண்டாம்ராஜராஜன் என்ற பட்டத்தோடு 1146-ல் சிங்காதன மேறினன். இவனுக்குப் பாட்டன்பெயரான விக்கிரமன் என்பதே பெயராக இடப்பட்டிருந்தது. இவன் தாய் வைப்பூருடையான்மகள் என்பதும், இவனுக்குச் சிலசகோதரிகள் உண்டென்பதும் தவிர இவன் இளமையைப்பற்றி வேறொன்றும் அறிதற்கில்லை.

முதற்குலோத்துங்கனும் விக்கிரமசோழனும் சோழ இராச்சியத்தைத் தகுதிபெற நிலைநிறுத்தியிருந்தமையால் அவர்கட்குப் பின்வந்த இரண்டாம் குலோத்துங்கனும் இரண்டாம் இராஜராஜனும் கவலைசிறிதுமின்றி அரசுபுரிந்தனர். ஆயினும், இவ்விரண்டாம் ராஜராஜனது ஆட்சிக்காலத்தில் 7-ம் ஆண்டில் ஒரு பஞ்சம் தோன்றி மக்களைப் பெரிதும் வருத்திற்று.[1] பணத்துக்கு வெகுமுடையிருந்தது. இவ்விராஜராஜன் சிலவளநாடுகளுக்கு இடப்பட்டிருந்த பெயர்களைமாற்றி வேறுபெயர் இட்டான். இராஜேந்திரசிங்கவளநாடு என்பது உலகுடைமுக்கோக்கிழானடி வளநாடு என்று பெயரிடப்பட்டது.[2] விக்கிரமசோழநல்லூர் என்ற ஊரை ராஜராஜவாஞ்சியூர் என்றுபெயரிட்டு, வாஞ்சியூர் உய்யக்கொண்டார் பஞ்சநதிவாணன் என்பவனுக்குக் கொடுத்தான்.[3] கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள தாராசுரம் கோயிலின் மூன்மண்டபத்திலுள்ள கற்றூண்களில் ராஜகம்பீரன்மண்டபம் என்று வெட்டப்பட்டிருக்கிறது. இவ்விரண்டாம் ராஜராஜனுக்கு ராஜகம்பீரன் என்ற பட்டம் இருப்பதால் இவனிந்தமண்டபத்தைக் கட்டியிருக்கலாமெனச் சிலர் கருதுகின்றனர்.[4]

[இத் தாராசுரமே ராஜராஜபுரம் என்றிருந்து பின் தாராசுரமென மருவியது என்று கல்வெட்டுத்துறையார் 1913-ம் ஆண்டறிக்கையில் எழுதியிருக்கின்றனர். இத்தாராசுரம் கோயிலின்மூன் இரண்டு அழகான துவாரபாலகர்சிலைகள் இருக்கின்றன. அவற்றின்கீழ்க் 'கல்யாணபுரம் எறி (போ)ந்து கொடுவந்த துவாரபாலகர்' என்று எழுதப்பட்டிருக்கிறது. இதேவிதமானசிலையிற் பல் மூகூர்த்தங்கள் மூலத்தானம் முன்மண்டபம் முதலியவற்றில் அமைக்கப்பட்டிருந்திருக்கின்றன. அவற்றுட் சில இதுபொழுது காணப்படவில்லை. பெரியபுராணச்செய்திகள் யாவும் மண்டபத்தைச் சுற்றிச் சிறியவுருவில் வெட்டப்பட்டுள்ளன.

[1] 397 of 13. [2] 742 of 09, [3] 336 of 17, [4] Epigraphist's Report for 1926—1927.

இவற்றுட் பல கல்வெட்டுக்காரால் பெரியஉருவில் வெளியிடப்பட்டுள்ளன. இத் தாராசுர ஆலயத்துள் வடபுறப்பத்தியில் 108 சிறு உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சிலவற்றின் [5]பெயர்களை யான்கண்டபடி குறிக்கின்றேன்.

24 நாங்கூருடையான்மாதேவரான தத்புருஷசிவர்.
25 நாங்......செய்யபாதத்தாரான அகோரசிவர்.
26 நல்லாவூர் பொன்னம்பலத்தாரான ஈசானசிவர்.
33 ஆயம்பூருடையாரான சதாசிவர்.
34 காவரமங்கலமுடையரான சந்திரசேகரரான ஆநந்தசிவர்.
35 ஐயூருடையார்திருமறைக்காடுடையரான ஈசானசிவர்.
39 வேற்குடையார்.........தத்புருஷசிவர்.
40 கொற்றங்குடையரான சிவகருணாலயரான ஈசானசிவர்.
54 மண்ணக்குடையார் மால்தேவரான வைராக்கிய சிவர்.
55 வடகக்குடையார் ஆநந்தக்கூத்தரான ஈசான சிவர்.
70 ... ... சதாசிவர்.
100 ... பொன்னம்பலக்கூத்தரான தர்மசிவர்.
107 பெருவேளூர்க்கிழவர் ... தர்மசிவர்.
108 மழுவச்ச உடையார் திருச்செம்பொன் பள்ளி உடையார்.

இவர்கள்யாரென்பதும், எதற்காக இவர்கள்திருவுருவம் இக்கோயிலில் செதுக்கப்பட்டுள்ளனவென்பதும் விசாரித்தற்குரிய செய்திகள்].

இவன்காலத்திலே ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்இருந்தனர், புகழேந்தி சந்திரன்சுவர்க்கி என்றொருவனாற் போற்றப்பட்டுவந்தார்" என்று நளவெண்பா கூறுமாயினும், போஷகன் இவனாகவேயிருத்தல்வேண்டும். ஒட்டக்கூத்தரோ இவ்விராஜராஜனைப் பலபடியாகத் துதித்துள்ளார். இவன்மேல் உலாப்பாடியதோடமையாமல் தாம் பாடிய ஈட்டியெழுபதிலும்,

"முத்தமிழிராஜராஜேந்த்ரன்முன்னமே
சுத்தவீரத்திறந்துலங்குதற்கொரு
பொய்த்தலைகொடுத்தலிற்புகழ்பெறாதென
மெய்த்தலைகொடுத்தனவீரக்குந்தமே" (60)

---

[5] பெயரெல்லாம் கிரந்தவெழுத்தில் வெட்டப்பட்டிருப்பினும் யாவரும் தெரிந்துகொள்ளுமாறு தமிழெழுத்தாற் காட்டப்பட்டுள்ளன.

என்று பாடுகிறார். [இவ்வீட்டிபெழுதபது தக்கயாகப்பரணி பாடிய பின்னர்த்தான் பாடப்பட்டது என்பது,

"எந்தையாமம்மைபாகத்திறைவனைவணங்கியாமே
பைந்தமிழ்ப்பரணிசெய்தப்பாடலோடந்தமாக"

என்ற ஈட்டியெழுபது 63-ம் பாடலால் விளங்கும்.]

தக்கயாகப்பரணியிலே,

உம்பராலுயர் புரந்தராதியிக லோகபாலரெயில் காவல்கூர்
செம்பொன்மாடநிறை ராசராசபுரி வீதிமாதர் கடைதிறமினோ.

யாவரும்பரவு மிந்த்ரரும்பழைய சந்த்ரசூரியரு மெண்டிசைத்
தேவரும்பரவு மிராசராசபுரி வீதிமாதர் கடைதிறமினோ.

யாவர்தேவரவர் தாமெனப்பெரிய விருவர்தேடரிய வொருபெருந்
தேவதேவர்தமி விராசராசபுரி வீதிமாதர் கடைதிறமினோ.

பாடியும்பணிந் தும்பரவியும் பண்டைநுங்கள் வடச்சேடிதேர்
தேடியுந்தவரு மிராசராசபுரி வீதிமாதர்கடை கடைதிறமினோ.

தென்னவன் றன்மதுராபுரி சீறிய
மன்னவன் மன்ன வரோதயன் வாழியே.

ஆநிரை தந்தலை மும்முடி மும்மத
மாநிறை தந்தபி ரான்மகன் வாழியே

பார்தரு வார்பெற மாறில் பரம்பொற்
றேர்தரு வானிரு தீபகன் வாழியே.

கூட மெடுத்த குளத்தொடு கோபுர
மாட மெடுத்த பிரான்மகன் வாழியே.

கோயில்முன் னேழ்நிலை கொண்டதொர் கோபுர
வாயில் புகுந்த பிரான்மகன் வாழியே.

இறையவ னிராசராச புரந்தர னேத்தும்
மறையவர் வாழிமா மகத்தவர் வாழியே!

முன்றிற்கிடந்த கருங்கடல் போய் முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல் பெற்ற மாகத மேருவை வாழ்த்தினவே.

என்றும் சிறப்பித்துப் பாடியிருக்கின்றனர். இராஜராஜபுரம் என்பது

'தாராசுரம்' என மருவியது என்பது பலரும் ஒப்புமொரு செய்தியாகு மானால் தக்கயாகப்பரணியிற் கண்ட இராஜராஜபுரி இதுவேயாகலாம். மேற்கூறியவைகளிலிருந்து இவ் விராசராசமன்னவன் பெரும்புலவர்களான ஒட்டக்கூத்தர்* புகழேந்தி முதலியவர்களோடு வேறுபல புலவர்களையும் ஆதரித்தவனென்பது விளங்கும். ஒட்டக்கூத்தர் பின்வந்தவர்களைப் பாடாததுகொண்டும், இவன்காலத்திலேயே வயதுமுதிர்ந்தவராகவிருக்க வேண்டுமென்பதுகொண்டும், இவன்காலத்திலேயே அவர் விண்ணுலகடைந்தனர் என்பது கொள்ளத்தக்கது. இவனுக்கு (1) புவனமுழுதுடையாள், (2) தரணிமுழுதுடையாள், (3) உலகுடை முக்கோக்கிழான் (அடிகள்) (4) அவனிமுழுதுடையாள், (5) தென்னவன் கிழானடிகள் என மனைவியர் ஐவர் உண்டு. இவர்களிடம் இவனுக்கு இருமக்கள் பிறந்தனராயினும் இவர்கள் பெண்மக்கள்என்றே மற்றொருகல்வெட்டாலும், இவனுக்குப்பின் இராஜாதிராஜதேவர் அரசாட்சிக்கு வந்திருப்பதாலும்† ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இவனது தகப்பனை குலோத்துங்கசோழனைப்போல இவன் ஒருமதத்தில் ஆழ்ந்த பற்றுடையவனும் மற்றொருசமயத்தில் வெறுப்புடையவனும் இருந்தவனல்லன். இவனது தகப்பன் வேரறக்களைந்த வைணவசமயத்தையும் இவன் விருத்திசெய்தான் என்று இவனது மெய்க்கீர்த்தியால்[1] விளங்குகிறது.

இவன் பதினறு ஆண்டு அரசாட்சிசெய்தபிறகு நோய்வாய்ப்பட்டுத் தனது கோயிலிற்கிடந்தான். இராச்சியகாரியங்களைக் கவனிக்கத் தனது மகாசாமந்தனை காரிகைக்குளத்தூருடையான் திருச்சிற்றம்பலமுடையான்என்னும் இயற்பெயரினையுடைய பல்லவராயனை நியமித்திருந்

* இப்புலவர்க்கு அரிசிற்கரையிலுள்ள ஊர்ஒன்றினை முற்றூட்டாக அரசன் கொடுத்தனன்; அதற்குரிய பழம்பெயரை நீக்கி இவர்பெயரால் கூத்தனூர் என்று பேரிடப்பட்டது. அதனில் கலைமகள்கோயில் ஒன்று உண்டு. அக்கலைமகளை எழுந்தருளிவித்திருந்த பழைய ஆதாரசிலையில் 'ஸ்வஸ்திஸ்ரீ ஸரஸ்வதி தேவியை எழுந்தளிவித்தார், இவ்வூர் நிலம் [இருபதரையே அரைக்காலே கீழ்முந்திரியும்] காணியுடைய மலரி உடையார். இந்தக் கவிச்சக்கரவர்த்திகள் போனர் கவிப்பெருமான் ஆநந்தவரதகூத்தர்' என்று காணப்படுவதால் இச்செய்தி நிலைபெறும். †Mythic Society's Journal Vol. XIX.

[1] திருநாகேச்சுரத்துக்கல்வெட்டு.

தான்[2] இவனுக்கு ஆண்சந்ததி இல்லாமையினலே முற்காலத்திலாண்ட சோழவாசர்வழியிலிருந்து ஒருவனையெடுத்து, அவனைவைத்து அரசாட்சிசெய்யச்சொல்லிப் பார்த்து, தான் இறந்தபின்னர் நாலு ஆண்டு கழித்து, அவனுக்கு இராஜாதிராஜதேவர் என்று பெயரிட்டுத்திருமுடி சூட்டும்படி ஏற்பாடுசெய்து கி. பி. 1162-ல் ஐப்பிசிமாதம் கடைநாளில்[3] இறந்தான். இவனுடையஆணையின்படியே மகாசாமந்தன் சங்கமன்மக்கள் மூவருள் மூத்தவனை நல்லமன் என்றவனைத் தெரிந்தெடுத்தான்.[4] இராசராசன் இறந்து நான்காண்டு அவன் பேராலேயே இராஜ்யபாரம் நடந்துவந்தது[5]. இவனது 7-ஆம் ஆண்டுவரை ஒரு மெய்க்கீர்த்தியும், அதற்குமேல் மற்றொருமெய்க்கீர்த்திபுமாக இரண்டு மெய்க்கீர்த்திகள் வழங்கலாயின.

முதல்மெய்க்கீர்த்தி.

பூமருவியதிருமாதும்புவிமாதும்ஜயமாதும்
நாமருவியகலைமாதும்புகழ்மாதும்நயந்துபுல்க
அருமறைவிதிநெறியனைத்துந்தழைப்ப
வருமுறைஉரிமைமணிமுடிசூடி
செங்கோல்சென்றுதிசைதொறும்வளர்ப்ப
வெங்கலிநீங்கிமெய்யறந்தழைப்ப
கலிங்கமேறிக்கடாமலைநடாத்தி
வரையாழி.................நடப்ப
இருசுடாளவும்ஒருகுடைநிழற்ற
செம்பொன்வீரஸிம்மாசனத்துப்
புவனிமுழுதுடையாளொடும்வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிபன்மரான
திரிபுவனசக்கரவர்த்திகள்ஸ்ரீராஜராஜதேவர்க்குயாண்டு.

மெய்க்கீர்த்தி, II.

பூமருவியபொழிலேழும்பெருப்பேழும்புனைநித்திலத்
தாமநெடுங்கொடைபொழிந்ததவளவெண்ணிலாகுளிர்பொதியச்
சுடர்ச்சக்கரவெற்பில்தனதடற்சக்கரவெயிலெறிப்பச்

---

[2] No. 433 of 24. [3] S. I. I. Vol IV. [4] சங்கரசோழன் உலா. [5] திருமழுவாடிக்கல்வெட்டு.

சினப்புலியுஞ்செங்கோலுமனைத்துயிர்க்குங்காவல்பூணப்
பணியணைமிசைப்பாஞ்சோதிபாற்கடல்நின்றெழுந்தருளி
மணிநெடுமுடி[1]கவித்துநெடுமண்மடந்தையைக்கைப்பிடித்துப்
பகைமடந்தைகொழுநனுகிப்போர்மடந்தையைமணம்புணர்ந்து
பருதிமுதற்குலம்விளக்கிச்சுருதிகளின்முறைவாழ்த்தெழ[2]
விழுந்தஅரிசமயத்தையுமீளவெடுத்து ஆதியுகங்
கொழுந்துவிட்டுத்தழைத்தோங்கக்கோடாதறங்குளிர்தூங்க
மாரிவாய்த்துவளஞ்சுரக்கத்[3]தாரணியோர்பிணிநீங்க
நல்லோர்தங்கற்புயரநான்மறையோர்தொழில்வளர[4]
எல்லாருந்தனித்தனியேவாழ்ந்தனமெனமனமகிழ்ந்து
ஒருவருடன்ஒருவற்கும்ஒன்றினுடன்ஒன்றுக்கும்
வெருவருபகைமைமனத்தின்றிவிழைந்துகாத[5]லுடன்சேர
இந்திரன்முதற்றிசாபாலர்எண்மருமொருவடிவாகி
வந்தபடிதாநின்றுமனுவாணைதனிநடாத்தி(ய்)
மாவியானையேபிணிப்புண்பனமணிச்சிலம்பேயாற்றுவன[6]
சொலாடையேகலக்குண்பன[7]தேமாவே[8]கடியப்படுவன
மாமலரேகடியவாயினவருபுனலேசிறைப்படுவன
காவுகளேகொடியவாயினகள்ளுண்பனவண்டுகளே
பொய்யுடையனவனவேயேபோர்மலேவனவெழுகழனியே[9]
மையுடையனநெடுவரையேமருளுடையஇனமான்களே
கயற்குலமேபிறழ்ந்தொழுகும்[10]கைத்தாயரேகடிந்தொறுப்பார்
இயற்புலவரேபொருள்வேட்பார்இசைப்பாணரேகூடஞ்செய்வார்
இவன்காக்குந்திருநாட்டில்[11]இயல்விதுவெனநின்றுகாவல்
நெறிபூண்டுமன்றியல்லது நினையாது
தந்தையிலோர்க்குத்தந்தையாகியுந்தாயிலோர்க்குத்தாயாகியு
மைந்தரிலோர்க்குமைந்தராகியுமன்னுயிர்கட்குயிராகியும்
விழிபெற்றபயனென்ன அமையப்பெற்றவருளெனவும்
மொழிபொரு[ளா-மிவ]னெனவும்முகம்பெற்றபனுவலெனவும்

பிரதிபேதங்கள். [1]கவித்தானென. [2]பொருள்வாய்பப. [3]வளஞ்சுரந்து. [4]துறைவளர. [5]யரிதகற்றிக்காத. [6]நளவெண்பாப் பாடல் ஈண்டுக் கவனிக்கற்பாலது. [7]கலக்குவன. [8]வடுப்படுவன. [9]சூழ்கழனி. [10]பிறழ்ந்தொழுக்கும். [11]'திருநாட்டின் இயல்பிது' வென்றுவாசிக்க.

எத்துறைக்கும்இறைவனென்னவும்வாஞ்செயும்பெருந்தவமெனவும்
முத்தமிழ்க்குந்தலைவனெனவும்மூன்றுலகின்முதல்வனெனவும்
அரசியற்கைமுறைநிறுத்தியல்லவைகடிந்தாறுய்த்துப்
பொருகலியினிருளகற்றிப்புகழென்னுநிலாப்பரப்பிக்
கன்னடருங்காலிங்கருந்தொற்றவருஞ்சிங்களருங்
கைகயருங்கொங்கணருங்கூபகருங்காசிகருங்
காம்போதருங்கோசலருங்கொந்தளரும்கப்பளரும்[12]
பப்பளரும்பாஞ்சாலரும்பொப்பளரும்பூலுவரும்
மத்திருமாராட்டரும்வத்தவருமாகதருங்
கொடிநுடங்குகனக்கோபுரக்கொற்றவாசலில்வர்தீண்டி
[13]கொட்பாவயறப்பாவலரோராவகற்றிக்
கருமாமுகில்திருநிறத்துக்கனகளப[14]ராஜராஜன்
திருமார்பிலுந்திருத்தோளிலுந்திருமனதிலும்பிரியாது
பற்றூர்குழலியர்க்கொருசூளாமணிரத்நமென்ன[15]
சிந்தாமணிமஹா ரத்னம்திலதசோள[16]குலரத்னம்
[17]பூமகளும்ஜயமகளும்புகழ்மகளும்புவிமகளு
நாமகளுந்தனித்தேவிநகதுங்கற்கிவளென்ன
பாராசர்பெருமைபுட..................டென்றாற்றப்
பேரரசுதனிநடாத்திப்பெண்ணரசாய்முடிசூடி
உடனுணைபுமுடனிருக்கையுமுடனரசும்உடன்சிறப்புங்
கடனுகவேபடைத்தருளி அறம்புரக்குங்கருணைவல்லி
தவனவயல்பசும்புரவிகடவுட்டேர்கடாவவருந்
தவன்குலத்துலகந்தொழவந்தருளிசந்த்ரவுதய(ம்)[18]
ஞானமுதற்குலநான்குநல்லொழுக்கமும்பெருங்கற்பும்
பெணுமயில்ராஜராஜன்பிரியாவேளைக்காரி[19]
அகலாதமாதாவென்றுரணங்களோருநான்கும்
புகலவருந்தனிநாயகிபுவனமுழுதுடையாளும்
அக்கிரமத்தொழிலால்அருள்மழைபொழிகிளர்வெண்குடைச்
சக்ரவர்த்தி[20]ஜனநாதன்தரணிபாலன்தனிநாயகி

---

[12] சிலவற்றிலில்லை. [13] இவ்வடி விளங்கவில்லை. [14] கற்கள்வன். [15] 'என்ன' சிலவற்றிலில்லை. [16] சோழ. [17] பூமகளிலும், சிலவற்றிற்காணப்படுகிறது. [18] சந்தர உதயம், [19] காரி என்று காணப்படுகிறது. [20] குடை ஸக்ரவர்த்தி.

ஆலங்கமலர்ச்சோலையினுலாவுங்கிளிதன்காதற்
பொருளாமொருபாற்கடல்விளையாடும்பேடையன்னம்
பேர்படைத்தசிலைநுதல்மயில்பூலோகசுந்தரியாம்
பேர்படைத்தநான்முகத்தோன்பெரும்படைப்பைவளர்க்கும்பனை
வையமேத்துஞ்சமந்தகமணிமாதவன்புனைகவுத்துவமணி
தையலாற்கொருசூளாமணிசதுர்வேதசிந்தாமணி
புண்ணியமொருவடிவுகொண்டுபுகழென்னுமணிபுனைந்து
பெண்ணியல்புதனதாகப்பிறந்ததெனச்சிறந்தபேதை
மன்னவர்தந்தேவியர்நின்வழிபடியோமடியோமென
முன்னின்றுதொழுதேத்தமுதன்மைபெற்றமூலநாயகி
இனம்பொழியுங்களிராஜன்யானையோடுதீதாடத்
தனம்பொழியும்ராஜராஜன்தாய்வேனைதரித்தபொற்கொடி
இசைமுழுதுங்குடைமுழுதுங்குணமுழுதுமீண்டுற்று
திசைமுழுதுமண்முழுதுந்திருமுழுதுமுடையாளொரு
மூர்த்தைமுழுதுலகுய்யமுடிசூடும்ராஜபண்டிதன்
த[ன் மன]முழுஒருசீர்துடையதேவிதரணிமுழுதுடையாளும்
பார்வாழவும்மண்வாழவும்பனுவல்வாழவு[மனுவாழவும்]
சீர்வாழவுமலாடகுலத்தவதரித்துத்திசைவிளக்கு
மேன்மையுடன்பெருங்கீர்த்திமண்மிசைவளர்க்குங்குயில்
உலகுடைமுக்கோக்கிழானடிகளென்னுமலகில்கற்பி
லரவிந்தமடையுந்திருந்தியதன்பெருங்குணத்திற்
சிறந்தோங்கியறந்தழைக்கும்மருந்ததியாமென்னவரும்
பெருமையும்அவனிமுழுதுடையாளுமன்னிபபெரும்
புகழ்படைத்ததென்னவன்கிழானடிகளும்ஊழியூழி
புலகற்பம்வாழிமணம்புணர்ந்திருப்பஉதயகிரி
உச்சியேறிமதிவெண்குடைபுதுநிழற்கீழ்ச்சந்திரமுக
மண்டலத்துத்தாமரைக்குள்செம்பவளவாய்இந்த்ரநீல
குஞ்சரமோடிளம்பிடியுடனிசைந்ததெனச்
செம்பொன் வீரசிம்மாசனத்துப் புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்
தருளிய கோபரகேசரிபன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ராஜராஜ
தேவர்க்கு யாண்டு ஏழாவது கன்னிநாயிற்று அபரபட்சத்து நவமியும்
புதன்கிழமையும்பெற்ற ஆயில்யத்துநாள் ....